விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 தை 14 செவ்வாய்க்கிழமை (28.01.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 40



கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி யாழ்ப்பாணம்.

Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம் 1000/= + 300/= மட்டுமே


## பிரதான கட்சி தலைவர்கள் நல்ல நண்பர்கள்

# யார் ஆட்சிக்கு வந்தாலும் திருடர்களுக்கு தண்டனையில்லை

## ஹிருணிகா பிரேமச்சந்திர குற்றச்சாட்டு




(கொழும்பு)

நாட்டில் பிரதான இரண்டு அரசியல் கட்சிகளில் எக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் திருடர்கள் தண்டிக்கப்படமாட்டார்கள் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர குற்றம் சுமத்தியுள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## ரணிலுக்கு அடிப்படை அறிவில்லை

சரத் பொன்சேகா



03

யாழ். பல்கலைக்கழக

## கிளிநொச்சி வளாகத்தில்

பௌத்த விகாரை 1

ஊடகவியலாளர்களின்

## பாதுகாப்பை உறுதிப்படுத்துக

காணாமல் போனவர்களின் உறவுகள் போராட்டம் 10

## வெளி மாவட்டங்களுக்கு யாழிலிருந்து கஞ்சா கடத்தல்

### கடற்படை வீரர் உட்பட இருவர் நேற்று கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்பாணத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு கஞ்சா கடத்திச் சென்ற கடற்படைவீரர் உட்பட இருவர் கனகராயன் குளம் பகுதியில் பொலிஸாரால் கைதுசெய்யப் பட்டுள்ளனர்

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு சென்ற பேருந்தும் பருத்தித்துறையில் இருந்து 23

கொரோனா வைரஸ் தொடர்பில்

## வடக்கு பொது மக்கள் அச்சமடையத் தேவையில்லை

(கொழும்பு)

சீனாவில்பரவிவரும்கொரோனா வைரஸ் தொடர்பில் வடக்கு மக்கள் தேவையற்று அச்சமடையத் தேவையில்லை என்று மாகாண தொற்றுநோய் தடுப்புப் பிரிவின் அதிகாரி மருத்துவர் எஸ்.சிவ கணேசன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் கருத்து தெரிவிக்கை 04

கொரோனாவால் பாதிக்கப்பட்ட

## முதலாவது நோயாளர் இலங்கையில் கண்டறிவு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட முதலாவது நோயாளர் இலங்கையில் கண்டறியப்பட்டுள்ளார். இந்தத் தகவலை சுகாதார மேம்பாட்டு பணியகம் (Health promotion bureau) உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இலங்கையில் தங்கியிருக்கும் சீன நாட்டுப் பெண் ஒருவரே கொரோனா வைரஸ் 23

## நீதிமன்றில் சமுகமளிக்காததால் சிவாஜிலிங்கத்துக்கு பிடியாணை

(யாழ்ப்பாணம்)

நில அபகரிப்புக்கு எதிரான போராட்டம் தொடர்பான வழக்கில் நீதிமன்றத்தில் ஆஜராகாத வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்துக்கு எதிராகப் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2018ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முல்லைத்தீவு. வட்டுவாகல் பகுதியில் மக்களுக்குச் சொந்தமான 617 ஏக்கர் காணியை அபகரிக்கச் சென்ற நில அளவீட்டாளர்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் நடத்திய போராட்டத்தில் கலந்து கொண்டமைக்காக 23

நித்திரைக்குச் சென்ற

## குடும்பஸ்தர் உயிரிழப்பு

### இளவாலையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மதியம் சாப்பிடாமல் நித்திரைக்குச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் ஒன்று இளவாலையில் இடம்பெற்றுள்ளது. 04

## எங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு காலம் கடந்தாலும் நீதியை பெறுவோம்

### பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன்



(பரந்தன்)

எங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு காலங்கடந்தாலும் நீதியை பெற்றே தீருவோம் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். கிளிநொச்சி பரந்தன் பகுதியில் அமைக்கப்பட்ட சனசமூக 23

தோல்வி பயம் வந்துவிட்டதால்

## ஐ.தே.கவினர் மகிந்தவை விமர்சிக்கின்றனர் - நாமல்

(கொழும்பு)

தோல்விப் பயம் வந்துவிட்ட காரணத்தினாலேயே, ஐக்கிய தேசியக் கட்சியினர் தொடர்ந்தும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை விமர்சித்து வருகிறார்கள் என்று ஆளுந்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ 23

## இலங்கைக்கு இந்தியா முழுமையாக ஒத்துழைக்கும்

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் தரன் ஜித்சிங் சந்து தெரிவிப்பு 23

## பெரும்பான்மை பெற்றால் நெருக்கடிகள் தீர்ந்துவிடும்

### பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)

பெரும்பான்மை ஆதரவுடன் அரசாங்கம் ஆட்சியமைத்தால் மாத்திரமே பல நெருக்கடிகளுக்கு தீர்வுகாண முடியும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## காணி விற்பனை

வடமராட்சிப் பகுதி
உடுப்பிட்டி கோயிற்பற்று
நவிண்டில் குறிச்சியிறை
தம்பியோடை என்னும்
காணி 23 பரப்பு, 1 குளி
விற்பனைக்குண்டு.
(டேவிட் காணி)

தொடர்பு (C-9077)
0775546963


## ராஜிதவால் அச்சுறுத்தல்

முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவினால் தமது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக வெள்ளைவான் சாரதிகள் என ஜனாதிபதித் தேர்தலின்போது கூறிய இருவரும் குற்றம் சுமத்தியுள்ளனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது தாமே வெள்ளை வான் கடத்தல்களின்போது சாரதிகளாக செயற்பட்டதாக செய்தியாளர் சந்திப்பில் கூறியிருந்தனர். எனினும், ஆட்சி மாற்றத்தின் பின்னர் இந்த சாரதிகளை பொலிஸார் கைது செய்திருந்தனர்.

வெள்ளைவான் சாரதிகள் என அடையாளப்படுத்திக் கொண்ட நபர்கள் தற்பொழுது தங்களது உயிருககு ராஜித தரப்பினால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர். (ம)


## உடன் தேவை

கணினியில் தமிழ், ஆங்கில ரைப்பிங் செய்யக்கூடிய ஆண், பெண் இருபாலாரும் தேவை. தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். மற்றும் (டியிற்றல்) போட்டோ கொப்பி செய்யக்கூடியவர்களும் தொடர்பு கொள்ளவும்.
(மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும்)

077 350 3990
(யாழ்.பல்கலைக்கழகம் முன்பாக) (2127)


## துயர் பகிர்கின்றோம்



**Mr. Manikam Ananthakumar**
(Divisional Education Officer, Tellipalai)

தெல்லிப்பழைக் கோட்டக் கல்வி அலுவலர் திரு.**மா.ஆனந்தகுமார்** அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு பேரதிர்ச்சியும் ஆழ்ந்த துயரமும் அடைகின்றோம். அவரது மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

(C-2123) பாடசாலைச் சமூகம் - யா/மல்லாகம் ம.வி, மல்லாகம்.


## வேலை ஆட்கள் தேவை

கொழும்பில் இயங்கி வரும் ஐஸ் கிறீம்/சைவ உணவகத்துக்கு கீழ்க்காணும் வேலைக்கு ஆட்கள் தேவை.

- சமையல் வேலையாட்கள் (வடை, சாம்பார், சட்னி வகை, சிற்றுண்டிகள், அரவை வேலை தோசை வகை வேலைக்கு)
- ஐஸ்கிறீம் மற்றும் ஜூஸ் கவுண்டர் வேலை தெரிந்தோர்

உடன் தொடர்பு கொள்ளவும், திறமைக்கு ஏற்ப சம்பளம் தினசரி வழங்கப்படும். உணவு தங்குமிடம் உண்டு. (C-9081)

Call: 077 771 0785

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


## துயர் பகிர்கின்றோம்



**மாணிக்கம் ஆனந்தகுமார்**
(கோட்டக்கல்வி அலுவலர் - தெல்லிப்பழை)

அவர்கள் மறைந்த செய்தி அறிந்து அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். அவரது மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
யா/கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயம்
(C-9082)

## துயர் பகிர்கின்றோம்



**மாணிக்கம் ஆனந்தகுமார்**
(கோட்டக் கல்விப் பணிப்பாளர் - தெல்லிப்பளை)

அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எம் அனுதாபங்களைச் சமர்ப்பிக்கின்றோம்.

கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்
வடக்கு மாகாணம்
(C-9084)

## மரண அறிவித்தல்



தோற்றம் 22 - 04 - 1963
மறைவு 26 - 01 - 2020

## மாணிக்கம் ஆனந்தகுமார்

(கோட்டக்கல்விப் பணிப்பாளர் - தெல்லிப்பழை)

வட்டக்கச்சியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் ஆனந்தகுமார் நேற்று முன்தினம் *(26.01.2020)* ஞாயிற்றுக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - சொர்ணம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசா - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் ரஜனியின் பாசமிகு கணவரும் வேதாகுலன் (யாழ் இந்து பழைய மாணவன், SLIIT), இலாவண்யா (மாணவி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சோமாதேவி, சரோஜினிதேவி, காலஞ்சென்றவரான கமலாதேவி, சகுந்தலாதேவி, மஞ்சுளாதேவி (கிளி/அன்னை சாரதாதேவி வித்தியாலயம் மலையாளபுரம், கிளிநொச்சி), இந்திராதேவி ஆகியோரின் அன்புச்சகோதரரும் இரவீந்திரன் (மேலதிக செயலாளர் - நீதி மனித உரிமை மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சு), இராமச்சந்திரன் (பொறியியலாளர் லண்டன்), றிசீந்திரன்(கனடா), பாலச்சந்திரன், பிரான்சிஸ் (கனடா), தட்சணாமூர்த்தி, பூபாலச்சந்திரன் (லண்டன்), தர்மேந்திரன், திருச்செல்வம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று *(28.01.2020)* செவ்வாய்க்கிழமை மு.ப 10.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பருத்தியோலை வீதி,
மயிலணி, சுன்னாகம்.
(9079)
தகவல்:- குடும்பத்தினர்
075 765 2738

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 22 - 04 - 1963
மறைவு 26 - 01 - 2020

அமரர்

**மாணிக்கம் ஆனந்தகுமார் (SLPS - I)**

(முன்னாள் அதிபர் - யா/ஏழாலை ம.வி,
கோட்டக் கல்வி அலுவலர் - தெல்லிப்பழை )

26.01.2020 அன்று இயற்கை எய்திய எமது முன்னாள் அதிபர் **திரு.மாணிக்கம் ஆனந்தகுமார்** அவர்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து நிற்பதுடன் அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ஏழாலை மகா வித்தியாலயம், ஏழாலை.
(2125)

# 5 மாணவர்கள் உட்பட 11 தமிழர்கள் கடத்தல்

# தஸநாயக்க, கரன்னகொட ஆகியோருக்கு எதிரான வழக்கை நிறுத்த சட்டமா அதிபருக்கு ஆலோசனை

(கொழும்பு)

முன்னாள் கடற்படை ஊடகப் பேச்சாளர் கொமடோர் டி.கே.பி.தஸநாயக்க மற்றும் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட ஆகியோருக்கு எதிரான வழக்கை இடை நிறுத்துமாறு கடந்த ஆட்சியின்போது இடம்பெற்ற பாதிப்புக்கள் குறித்து விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு சட்டமா அதிபருக்கு ஆலோசனை வழங்கியது.

2008 மற்றும் 2009 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 பேரை வெள்ளை வானில் கடத்திச் சென்று கப்பம் பெற்றுக்கொண்டு காணாமல் ஆக்கிய சம்பவம் தொடர்பாகவே வசந்த கரன்னாகொட மற்றும் தஸநாயக்க உள்ளிட்ட 14 பேருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-7)





## ரணிலுக்கு அடிப்படை அறிவில்லை

# ராஜபக்ஷக்களுக்கு ஆதரவானவர்களை ஐ.தே.கவிலிருந்து உடன் விலக்குங்கள்

## சஜித்திடம் சரத் கோரிக்கை



(கொழும்பு)

**ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் ராஜபக்ஷக்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டவர்களை இனங்கண்டு, சஜித் பிரேமதாஸ அவர்களை கட்சியிலிருந்து உடன் விலக்க வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா கோரிக்கை விடுத்தார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"ஐக்கிய தேசியக் கட்சியில் தலைவர் தொடர்பாக நான் ஒன்றைக் கூறிக்கொள்கின்றேன்.

கம்பஹா மாவட்டம் என்பது 18 இலட்சம் வாக்குகளைக் கொண்ட ஒரு மாவட்டமாகும். இந்த மாவட்டத்திற்கு ஏதாவது பெரிதாக செய்ய வேண்டும் என அவரிடம் அழாத குறையாக கேட்டிருந்தேன்.

ஆனால், அவர் அதனை மேற்கொள்ளவில்லை. 2019 ஆம் ஆண்டு வடக்கு மற்றும் கிழக்கிற்காக 63 பில்லியன் ரூபாயை செலவழித்தார்.

ஒருவருடத்தில் இவ்வளவு பெரிய தொகையை எவ்வாறு செலவழிப்பது. இதுதொடர்பாக அடிப்படை அறிவு அவசியமாகும்.

அதிகளவிலான வாக்குகள் கிடைக்கும் மாவட்டங்களுக்கு 4 வருடங்களாக 10 பில்லியன் ரூபாயைக் கூட செலவழிக்கவில்லை.

இந்தத் தவறு மட்டுமன்றி, மத்திய வங்கியில் பிணைமுறி மோசடியும் இடம்பெற்றது.

இவைதான் எமது தோல்விக்கு வழிவகுத்தன. நாம் அடுத்த கட்ட பயணத்தை மேற்கொள்ள வேண்டுமெனில், திருடர்களை இணைத்துக் கொள்ளாமல் பயணிக்க வேண்டும்.

எமது தரப்பிலுள்ள சிலர் ராஜபக்ஷக்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். இவ்வாறானவர்களை சஜித் பிரேமதாஸ இனங்கண்டு அவர்களை விலக்க வேண்டும்.

அப்படி செய்யாவிட்டால், மீண்டும் தோல்வியையே எம்மால் சந்திக்க நேரிடும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

### காணிப்பிரச்சினையால் தாயின் உயிர் பறிபோனது

# துப்பாக்கிச் சூட்டில் குடும்பப்பெண் பலி!

## இருவர் படுகாயம்; ஒருவர் கைது

(பிபிலை)

நீண்ட காலமாக இருந்து வந்த காணிப்பிரச்சினையால் ஏற்பட்ட முறுகல் தீவிரமடைந்ததையடுத்து இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் பெண் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானதுடன் மேலும் இருவர் படுகாயங்களுக்குள்ளாகினர்.

இவ்வாறு காயமடைந்த இருவரும் மொனராகலை மற்றும் பிபிலை அரசினர் வைத்தியசாலைகளில் தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இத்துப்பாக்கிப் பிரயோகத்தையடுத்து, துப்பாக்கியுடன் தப்பிச்சென்று மறைந்திருந்த நபரை பிபிலைப் பொலிஸார் நேற்றுக் கைது செய்தனர்.

இச்சம்பவம், பிபிலைப் பகுதியின் பிட்டகும்பர என்ற இடத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்றது.

பிட்டகும்பரையைச் சேர்ந்த ஜே.பி. தயானி வயலட் என்ற 38 வயது ஆறு பிள்ளைகளின் தாயே துப்பாக்கிப் பிரயோகத்தில் பலியானவராவார்.

மேலும் பலியான பெண்ணின் மருமகனான இந்திக்க சமரவீர, அவரின் மகள் வத்சலா நிமேசினி ஆகிய இருவரும் படுகாயங்களுடன் மொனராகலை மற்றும் பிபிலை அரசினர் வைத்திய சாலைகளில் தீவிர சிகிச் சைப் பிரிவுகளில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை காட்டில் மறைந்திருந்த நபரை கொலைக்குப் பயன்படுத்திய துப்பாக்கியுடன் பொலிஸார் கைது செய்து விசாரணைக்குட்படுத்தினர்.

அவ் விசாரணையின் போது நீண்டகாலமாக இருந்து வந்த காணிப் பிரச்சினை உக்கிரமடைந்தனாலேயே, துப்பாக்கிப் பிரயோகம்இடம்பெற்றமை தெரியவந்தது. (இ-7)

## "இலங்கையுடனான ஆழமான வேரூன்றிய நட்பை இந்தியா மதிக்கிறது"

# மகிந்தவுக்கு நன்றி கூறிய மோடி



(கொழும்பு)

இலங்கை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் மாலைதீவு ஜனாதிபதி ஆகியோருக்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி நன்றி தெரிவித்தார்.

இந்திய குடியரசு தினத்தை முன்னிட்டு வாழ்த்துக் கூறியமைக்கு. பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு பிரதமர் மோடி நன்றி தெரிவித்தார்.

இது குறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றை இட்டுள்ள பிரதமர் நரேந்திர மோடி, "குடியரசு தின வாழ்த்து தெரிவித்தமைக்கு பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு நன்றி கூறியதுடன், இலங்கையுடனான ஆழமான வேரூன்றிய நட்பை இந்தியா மதிக்கிறது" எனவும் தெரிவித்தார்.



முன்னதாக, கொழும்பில் இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலாசார நிகழ்வில் தனது பாரியாருடன், பங்கேற்றதாக மகிந்த ராஜபக்ஷ டுவிட்டரில் பதிவிட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தென்னாபிரிக்காவை தோற்கடித்து தொடரைக் கைப்பற்றியது இங்கிலாந்து

இங்கிலாந்து - தென்னாபிரிக்கா அணிகள் இடையிலான 4-வது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ஜோகன்னஸ் பர்க்கில் நடைபெற்றது. நேற்று முன்தினம் 3-வது நாள் முடிவில் இங்கிலாந்து 2-வது இன்னிங்சில் 248 ரன்களில் ஆல்-அவுட் ஆனது.

முதல் இன்னிங்சில் இங்கிலாந்து 400 ரன்னும், தென்னாபிரிக்கா 183 ரன்களும் அடித்திருந்ததால் தென்னாபிரிக்காவுக்கு 466 ரன்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

466 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் தென்னாபிரிக்கா களம் இறங்கியது. 3-வது வீரராக களம் இறங்கிய வான்டர் துஸ்சென் சிறப்பாக விளையாடினார். அவர் சதம் அடிப்பார் என்று எதிர்பார்த்த நிலையில் 98 ரன்னில் ஆட்டமிழந்தார்.

மற்ற வீரர்கள் சொற்ப ரன்களில் ஆட்டமிழக்க தென்னாபிரிக்கா 274 ரன்னில் ஆல்அவுட். இதனால் 4-வது டெஸ்டை 191 ரன்கள் வித்தியாசத்தில் வென்றதுடன் தொடரை 3-1 எனக் கைப்பற்றியது இங்கிலாந்து.




## வடக்கு பொது ....

யில்,இலங்கையைப் பொறுத்த வரையில் சீனாவுடன் தொடர்புகள் காணப்படினும் கொரோனா வைரஸ் தொற்றுள்ள பிரதேசமாகக் காணப்படவில்லை.

எனினும் ஊடகங்களிலும், சமூக ஊடகங்களிலும் இதுதொடர்பான தப்பான விடயங்கள் வெளியிடப்பட்டு மக்களிடையே தேவையற்ற பயமும் குழப்பங்களும் ஏற்படலாம் என்பதனால் இந்த தகவல்களை பொதுமக்களின் நன்மைகருதித் தெரிவிக்கின்றோம்.

தற்போது சீனாவில் குறிப்பிட்டதொரு மாகாணத்தில் சுமார் 3 ஆயிரம் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர். அவர்களில் 80 நோயாளர்கள் உயிரிழந்துள்ளனர்.

எனினும் ஏனைய நாடுகளில் சீனா போன்று கொரோனா வைரஸ் நிரந்தரமான தொற்றுக் காணப்படவில்லை.


அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் சுகாதார ஊழியர்களிடம் கொரோனா வைரஸ் தொற்று அறிகுறிகள் காணப்பட்டுள்ள போதும் சீனா போன்று ஆபத்துக்கள் இல்லை என்றார். (ம)

## குடும்பஸ்தர்...

இதில் அதே இடத்தினைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான ஆசைமுத்துவிக்டர் ஜெயராஜ் (வயது 57) என்பவரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டுள்ளார். (ம)

# மரண அறிவித்தல்



## சுப்ரமணியம் கணேசமூர்த்தி

**(பொலிஸ் உத்தியோகத்தர்**

**ஓய்வு பெற்ற P.W.D ஓவசியர்)**

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் குடமியன் வரணியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்ரமணியம் கணேசமூர்த்தி (பொலிஸ் உத்தியோகத்தர் ஓய்வு பெற்ற P.W.D ஓவசியர்) நேற்று (27.01.2020) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்ரமணியம் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் மகனும் வல்லிபுரம் - சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் பத்மாவதியின் அன்புக் கணவரும் அமரர் ஞானாம்பிகை, கமலாம்பிகை, யோகாம்பிகை, காலஞ்சென்ற குகமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும் மீனவேணி, ஜெயவேணி, கமலவேணி, கலைவாணி, கருணாகரன், பத்மவேணி (ஆசிரியர்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பாஸ்கரன் ஆகியோரின் அன்புத்தந்தையும் குமாரவேலு சுத்தானந்தன், நகுலேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் கிருத்திகன், வித்யாஷர், விதுர்ஷிகா, பிரியங்கா, அபிராமி, கேரன், அபிஷா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (29.01.2020) நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர்க்கு அறியத்தருகின்றோம்.

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1934 - 10 - 13 | 2020 - 01 - 27 |

பருத்தித்துறை வீதி,
குடமியன் வரணி.

(C-9085)

தகவல்:-
குடும்பத்தினர்
077 889 2202

# பலவீனமான அரசாங்கம் தோற்றம் பெற்றால் மக்களின் எதிர்பார்ப்பு பயனற்றதாகி விடும்

## பேராசிரியர் பீரிஸ் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**ஜனாதிபதித் தேர்தலின் வெற்றி பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவை பெறுவதன் ஊடாகவே முழுமையடையும் எனவும் பலவீனமான அரசாங்கம் தோற்றம் பெற்றால் ஜனாதிபதித் தேர்தலின் வெற்றியும் மக்களின் எதிர்பார்ப்பும் பயனற்றதாகி விடும் எனவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டினார்.**

கெடபே ராஜபுரராம விகாரையில் நேற்று முன்தினம் வழிபாட்டில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறினார். பாரிய போராட்டத்தின் மத்தியில் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளோம்.

மக்கள் அரசியல் ரீதியில் சரியான



தீர்மானத்தை எடுத்துள்ளார்கள். ஜனாதிபதித் தேர்தலின் வெற்றி இடம்பெறவுள்ள பொதுத்தேர்தலிலேயே முழுமையடையும்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடனான அரசாங்கத்தை தோற்றுவிப்பதே எமது பிரதான இலக்காகும்.

அரசியல் மற்றும் அபிவிருத்தி ரீதியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ புதிய கலாசாரத்தையும் திட்டக் கொள்கையினையும் அறிமுகப்படுத்தியுள்ளார்.

தேர்தல் கொள்கை பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தும் 5 ஆண்டுகளுக்குள் நிறைவேற்றப்பட வேண்டுமாயின் ஜனாதிபதியின் கொள்கைக்கு அமைய செயற்படும் அரசாங்கம் தோற்றம் பெற வேண்டும்.

ஜனாதிபதி மக்களின் நலன் கருதி பாராளுமன்றத்தை கலைத்து தனக்காக அரசாங்கத்தை ஸ்தாபிக்கும் அதிகாரம் அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் ஊடாக இல்லாதொழிக்கப்பட்டது.

இந்நிலைமை மாற்றியமைக்கப்பட வேண்டும். மக்களுக்கு பலமான அரசாங்கத்தின் ஊடாக அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதற்காகவே மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவை கோருகின்றோம்.

பெரும்பான்மை ஆதரவுடன் பலமான அரசாங்கத்தை தோற்றுவிக்க முடியாவிடின் ஜனாதிபதித்தேர்தலின் வெற்றியும் மக்களின் எதிர்பார்ப்பும் பயனற்றதாகி விடும்.

பெரும்பான்மை ஆதரவு இல்லாமலே ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி இன்று மக்களுக்குத் தேவையான அடிப்படை அபிவிருத்திகளை முன்னெடுத்து வருகின்றார்.

ஆகவே பொதுத்தேர்தலில் மக்கள் அரசியல் ரீதியில் சிறந்த தீர்மானத்தை முன்னெடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## செயற்பட்டு மகிழ்வோம்

(யாழ்ப்பாணம்)

யா/அல்வாய் இ.த.க. பாடசாலை ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கான செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு இன்று 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் ந.இராசலிங்கம் தலைமையில் இடம் பெறும்.

இதில் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலாளர் ஈ.தயாரூபன், சிறப்பு விருந்தினராக அல்வாய் கிழக்கு கிராம உத்தியோகத்தர் சி.பிரதீபன், கௌரவ விருந்தினராக அல்வாய்க் கிழக்கு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.கமலி பிறேம்குமார் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)


3 ஆம் ஆண்டு நினைவுக் கிரியை

அழைப்பு

அமரர்

திரு. கார்த்தி கதிரவேலு



மலர்வு: 1926.04.12


உதிர்வு: 2017.01.31

கடந்த 31.01.2017 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கு அமரர் திரு.கார்த்தி கதிரவேலு அவர்களின் சிவபதப்பேறு குறித்த 3 ஆம் ஆண்டு நினைவுக் கிரியைகள் இன்று 28.01.2020 செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

இல. 222 நாவலர் வீதி,
பண்டாரிக்குளம்,
வவுனியா.

இங்ஙனம்
குடும்பத்தினர்.


## கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(கரணவாய்)

சமூகத்துக்காகவே பொலிஸ் என்ற கருத்தை செயற்படுத்தும் நோக்குடன் நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜெயதிலகவின் ஏற்பாட்டில் காங்கேசன்துறை பிரதேசத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி டபிள்யூ பிஜே சேனாதிராசாவின் வழிகாட்டலில் ஓய்வுபெற்ற ஆசிரியர் வில்பர்ட் ரணசிங்கவின் நிதியுதவியுடன் துன்னாலை தெற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் அனைத்து மாணவர்களுக்கும் கல்வி அறிவை மேம்படுத்தும் நோக்குடன் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு பாடசாலை பிரதான மண்டபத்தில் கடந்த 24 ஆம் திகதி நடை பெற்றது. இந்நிகழ்வில் காங்கேசன்துறை பிரதேசத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி, காங்கேசன்துறை பிரதேச உதவி பொலிஸ் அத்தியட்சகர் சித்ரா ஆனந்த ஜெயக்கொடி மற்றும் பொலிஸ் உயரதிகாரிகள் கலந்து கொண்டனர். (இ-60)

## ஹெரோயின் விற்பனை மூவர் கைது

(பதுளை)

பதுளை, கனுபெலேள பகுதியில் ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்ட மூவரை பொலிஸார் கைது செய்தனர். ஹெரோயின் விற்பனை தொடர்பில் பதுளை பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டிற்கு அமைய பதுளை பொலிஸ் நிலைய உதவிப் பொலிஸ் பரிசோதகர் கே.எம்.எம். சம்பத் தலைமையிலான குழுவினர் கனுபெலேள பகுதியில் நேற்றுக் காலை மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போதே இம் மூவரும் கைது செய்யப்பட்டனர். (இ-7)


கலைமகளின் கண்ணீர் காணிக்கை



அமரர் மாணிக்கம் ஆனந்தகுமார்

(கோட்டக்கல்வி பணிப்பாளர், தெல்லிப்பழை)

அரும்பணி ஆற்றிய பெருந்தகையே
ஆண்டவன் அடியினை விரைவில் அடைந்ததேனோ
கடமைதவறாத கண்ணியவாளனே
கடமை முடியாது சென்றதுவேனோ
மீளாத்துயரில் எம்மை ஆழ்த்தி
மீளாத்துயில் கொண்டதுவேனோ

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

பாடசாலைச் சமூகம்
யா/மயிலிட்டி வடக்கு, கலைமகள் ம.வி., காங்கேசன்துறை.

# நலம் தரும் ஜோதிட குறியீடுகள்

## போட்டிகளில் வெற்றி தரும் குறியீடு



புராண, இதிகாச கதைகளிலிருந்து, தற்கால திரைப்படக்கதைகள் வரை பெண்ணிற்காக போட்டியிடுவது போன்ற காட்சிகள் அக்கதைகளில் அமைக்கப்பட்டிருப்பதை காணலாம். அதாவது பெண்ணிற்காக போட்டியிடும் வழக்கம் பண்டைய காலத்தில் சமூகத்தில் இருந்துள்ளது. போட்டிகளில் வெற்றி பெறுபவனுக்கே பெண்ணைக் கொடுக்கும் வழக்கம் ஷத்திரியர்களிடம் இருந்துள்ளது.

ஜோதிட ரீதியாக ஆராய்ந்து பார்த்தால் பெண்ணிற்கும் போட்டிக்கும் ஒரு தொடர்பு இருப்பதை அறியலாம். ஜோதிட விதிகளின்படி போட்டியைக் குறிக்கும் பாவம் ஆறாம் பாவமாகும். காலப்புருஷ லக்னமான மேசத்திற்கு ஆறாம் பாவம் கன்னியாகும். கன்னி இராசியின் குறியீடு கன்னிப்பெண்ணாகும்.

எனவே நாம் ஏதாவது ஒரு போட்டியில் கலந்து கொள்ள செல்லும் போது வழியில் கன்னிப் பெண்களை கண்டால் போட்டியில் வெற்றி பெறுவது நிச்சயமாகும்.

போட்டிக்கோ அல்லது போருக்கோ செல்பவர்களின் கைகளில் கன்னிப் பெண்கள் கயிறு கட்டி அனுப்பும் வழக்கம் சமூகத்தில் இருந்துள்ளதை அறியமுடிகிறது. கன்னிப் பெண்கள் மனங்குளிரும் விதமாக அவர்களுக்கு பூ, ஆடை, அலங்காரப்பொருட்கள், ஆபரணங்கள் இவைகளை தானமாக கொடுத்து விட்டு போட்டிகளில் கலந்து கொண்டால் வெற்றி வாய்ப்புகள் அதிகமாக இருக்கும்.

கன்னி இராசியின் உருவத்தை சித்திரமாகவோ அல்லது புகைப்படமாகவோ எடுத்து கண்ணிற்கு தெரியுமிடத்தில் வைத்து தினமும் பார்த்து வந்தால் போட்டிகளில் வெல்லலாம்.

# செயற்பட்டு மகிழ்வோம்

(யாழ்ப்பாணம்)

அராலி முருகமூர்த்தி வித்தியாசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு நாளை 29 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் தி.தவரத்தினம் தலைமையில் நடைபெறும். இதில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஆ.நித்திலவர்ணன், சிறப்பு விருந்தினராக சங்கானை பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் டா.புஜங்கன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

(கொடிகாமம்)

குடமியன் அ.த.க பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டுத்துறை நிகழ்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் ய.லினாஷ்குமார் தலைமையில் நடைபெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலய செயற்பட்டு மகிழ்வோம் இணைப்பாளர் திருமதி இ.மயில்வாகனசிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-114)

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

(கொடிகாமம்)

கெற்பேலி அ.த.க. பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அதிபர் க.ஞானராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய செயற்பட்டு மகிழ்வோம் இணைப்பாளர் திருமதி இ.மயில்வாகனசிங்கம், பழைய மாணவன் கு.சர்வானந்தன், கௌரவ விருந்தினராக கெற்பேலி அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.லோகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-114)

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

சமூக சேவையாளர் வேதநாயகம் தபேந்திரன் அண்மையில் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி ஜெ. கஜநிதிபாலன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலராகக் கடமையாற்றும் இவர் சமூக சேவைகள் உத்தியோகத்தர் சங்கத்தில் 19 வருடங்கள் பொதுச் செயலாளராகக் கடமையாற்றினார். தற்போது உப தலைவராக உள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத் தமிழ் சங்கத்தின் பொதுச் செயலாளர் பதவி உட்பட பல்வேறு பொது அமைப்புக்களில் அங்கம் வகித்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-9)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(குருநகர்)

குருநகர் சென். ஜேம்ஸ் மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டி வித்தியாலய மைதானத்தில் நாளை 29ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் அதிபர் கே.கலியுகன் தலைமையில் நடைபெறும். இதில் பிரதம விருந்தினராக கிருபா லேணர்ஸ் அதிபர் தேசபந்து லயன் அ.கிருபாகரன், சிறப்பு விருந்தினராக புனித யாகப்பர் ஆலய பங்குத் தந்தை சாள்ஸ் யஸ்ரின், கௌரவ விருந்தினராக கிராம உத்தியோகத்தர் எஸ்.குருதர்சன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-106)

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

(கொடிகாமம்)

உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் வித்தியாலய மைதானத்தில் அதிபர் க.சண்முகதாஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் வ.நடராசா, சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு நிலை அதிபர் ஏ.எஸ்.ஏ.அலெக்சாண்டர், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் சி.செல்வரூபன், பழைய மாணவர் (அவுஸ்திரேலியா) கி.ஜெயந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-114)

# கும்பாபிஷேகம்

(கரணவாய்)

தென் புலோலியூர் ஸ்ரீ மாவடி வைரவர் ஆலய நூதன அஷ்ட பந்தன பஞ்ச குண்டபக்ஷ மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9. 24 மணி முதல் முற்பகல் 10.54 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நடைபெறும்.

நாளை புதன்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் நடைபெறும். (இ-60)

# இராசி பலன்

**மீனம்:** தொழிலில் சிறு மாற்றம் செய்யும் சூழ்நிலை ஏற்படலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

**மேடம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களை தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**இடபம்:** தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்த சேரலாம், வாழ்க்கை தரம் உயர வழிவகை செய்வீர்கள், போசன சுகமுண்டு, எடுத்த காரியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மிதுனம்:** உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாகப் பார்ப்பர், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது.

**கும்பம்:** உறவினர் வருகையால் திடீர்ச் செலவுகள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை, மறக்க முடியாத இனிய சம்பவமொன்று நடைபெறலாம், கற்பனை மிகுதியான நாள்.

| | | | |
|---|---|---|---|
| | | | ராகு |
| சுக், சந் | **இராசி பலன்** கிரகநிலை | | |
| சூரி, புத | சந்திராஷ்டமம் ஆயில்யம் | | |
| சனி, கேது, குரு | செவ் | | |

**28.01.2020**

தை 14, செவ்வாய்க்கிழமை

சூரிய உதயம் காலை 6.36 மணிக்கு

திருதியை காலை 8.02 மணிவரை

சதயம் முற்பகல் 9.12 மணிவரை

சுபநேரம்- 11.06-12.36 மணிவரை

இராகுகாலம்-3.36-5.06 மணிவரை

சதுர்த்தி விரதம்

திடமான உடலில் தான் திடமான மனம்

வளவன்

**கடகம்:** ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும், உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களைவிட்டு விலகலாம், பிரயாண பயமுண்டு, கௌரவக் குறைவான சில சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மகரம்:** தொழிலில் உயரதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், உடல் நலம் சீராகும், பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**சிம்மம்:** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், கனவு பலித முண்டு, மனதில் நினைத்த புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**தனுசு:** மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.


**விருச்சிகம்:** வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, வியாபார விருத்தியுண்டு, குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு, தாய் வழி ஆதரவு பெருகும்.

**கன்னி:** குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், மருத்துவச் செலவுகள் குறையும், போசன சுகமுண்டு.

# மாற்று அணியால் எமக்குப்பாதிப்பில்லை மக்களின் ஒற்றுமையே பிளவுபடும்!

## சுமந்திரன் கூறுகிறார்



(கொழும்பு)

**மாற்று அணி, கூட்டமைப்புக்கு தாக்கத்தை ஏற்படுத்தாது.மாறாக தமிழ் மக்களின் ஒற்றுமையை மிகவும் மோசமாக பிளவுபடுத்துமென நாடாளு மன்ற உறுப்பினர் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.**

தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் தற்போது எந்தவொரு பிரச்சினையும் இல்லை.

அதாவது கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுடனும் சிறந்த நல்லுறவையே நாம் பேணி வருகின்றோம். அந்தவகையில் அவர்களும் கூட்டமைப்பிலிருந்து விலகுவதாக அறிவிக்கவில்லை.

இந்நிலையில் கூட்டமைப்பு பொதுத்தேர்தலை எதிர்கொள்ளத் தற்போது தயார் நிலையிலேயே உள்ளது. இதனால்தான் அனைவருக்கும் அழைப்பு விடுத்தோம்.

இதேவேளை மாற்று அணி எங்களுக்கு தேவையில்லை.

மேலும் மாற்று அணி உருவாகுமாக இருந்தால் அது தமிழ் மக்களின் ஒற்றுமையையே மிகவும் மோசமான பாதிப்புக்கு உள்ளாக்கும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சஜித்தால் ஐ.தே.க.பிளவுபடாது-சுஜித்



(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பு கட்சிப் பிளவிற்கான அறிகுறியல் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பு கட்சி பிளவிற்கான அறிகுறியல்லவென நாடாளுமன்ற உறுப்பினர் சுஜித் சஞ்சய பெரேரா தெரிவித்தார்.

சிறிகொத்தாவில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

குறித்த ஊடகச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "சஜித் பிரேமதாஸவுக்கும் கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு தொடர்பாக அனைத்து உறுப்பினர்களும் அறிந்தேயிருந்தனர்.

இந்தச் சந்திப்பு கட்சிக்குள் காணப்படும் பிளவை .வெளிப்படுத்துவதாக முன்வைக்கப்படும் கருத்துக்களில் உண்மையில்லை.

மேலும் கட்சியின் வரலாற்றைப் பொறுத்தவரை, அது பல சவால்களை எதிர்கொண்ட போதிலும் ஒருபோதும் பிளவடையவில்லை. அதேபோன்று தற்போது ஏற்பட்டிருக்கும் குழப்ப நிலைக்கும் விரைவில் சுமுகமான முறையில் தீர்வு எட்டப்படும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் அவரின் ஆதரவாளர்களுக்கே வேலைவாய்ப்பு

## சம்பிக்க விசனம்

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் அவரின் ஆதரவாளர்களுக்கே வேலைவாய்ப்பு வழங்கப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ராஜபக்ஷக்களின் அரசு மார்ச் மாதத்திற்குள் ஒரு இலட்சம் வேலைவாய்ப்புக்களை வழங்கவுள்ளது.

இன்னும் 50 ஆயிரம் பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பை ஏற்படுத்தியுள்ளார்கள். 2005 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வரும்போது 7 இலட்சம் அரச ஊழியர்கள்தான் இருந்தார்கள்.

அவர் ஜனாதிபதி பதவியை விட்டு வெளியேறும்போது 14 இலட்சமாக அந்த எண்ணிக்கை உயர்ந்திருந்தது.

ஏனெனில், இந்த இடைப்பட்ட 10 வருடங்களில் அவர்களுக்கு ஆதரவானவர்களுக்கே வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது. இதுதான் அன்று இடம்பெற்றது.

நான் அவர்களது ஆட்சியில் அமைச்சராக இருந்தபோது 2010 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் அண்டுவரை 4 ஆயிரம் வேலைவாய்ப்புக்களை வழங்கியுள்ளேன்.

ஆனால், நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் 100 வேலைவாய்ப்புக்களை வழங்கக்கூட எம்மால் முடியாமல் போனது. இது எமது தவறு என்பதை நாம் உணர்ந்துள்ளோம்.

எனவே, எதிர்வரும் பொதுத் தேர்தலில் இந்த பிழைகளை நிவர்த்தி செய்து கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் பலமான கூட்டணியொன்றுடன் களமிறங்குவோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

பழைமை வாய்ந்த
ஆதி சக்தி வாய்ந்த
மலையாள மந்திரம்



+ ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
+ பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
+ கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
+ காணி விற்பனையில் பிரச்சினையா?
+ வியாபார முன்னேற்றம்
+ வீட்டில் ஒற்றுமை உண்டாக
+ பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

(C-9024)

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும்.
(பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால்
பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

றொங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 112 3471
Viber:076 466 4153.


வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>உயரம்: 6'1"<br>தகைமை/தொழில்: MSc பட்டதாரி, முகாமையாளர்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/ 10416 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 4<br>கி.பா: 31 செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L, அழகுக்கலை<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/10429 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 4<br>கி.பா: 54 சூரி செவ் 1 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L, Qatar<br>தொ.இ: B/ 10419 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: அழகுக்கலை<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/10437 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 1<br>கி.பா: சூரி செவ் 5 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: O/L, சொந்ததொழில்<br>எதிர்பார்ப்பு: தொழில் புரிபவர் / தொழில் இல்லாதவர்<br>தொ.இ: B/ 10421 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பரணி 3<br>கி.பா: 35<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: HNDA, B.com, கணக்கியலாளர்<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: G/10438 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 29 ¼<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BBA Reading, அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/ 10422 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 2<br>கி.பா: 63 சூரி செவ் 1 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L, அழகுக்கலை<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/10439 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# லிந்துலையில் பாரிய தீ விபத்து இரு கடைகள், வீடு, லொறி தீக்கிரை



(லிந்துலை)

லிந்துலை பாமஸ்டன் பகுதியில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் இரு கடைகளும் வீடொன்றும் லொறியொன்றும் எரிந்து சேதமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தீ விபத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 10 மணியளவில் இடம்பெற்றதாக மக்கள் தெரிவித்தனர்.

லிந்துலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியில் லிந்துலை பாமஸ்டன் பகுதியில் வீதிக்கு அருகாமையிலுள்ள ஒரே கட்டடத்தில் அமையப்பெற்றுள்ள ஹாட்வெயார், மரத் தளபாட கடை, வீடு எரிந்ததுடன் கடைக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியும் தீக்கிரையானது.

லிந்துலை பொலிஸார் மற்றும் பிரதேச மக்கள், நுவரெலியா மாநகர சபையினரின் தீயணைப்பு பிரிவினர், தலவாக்கலை மற்றும் நுவரெலியா இராணுவத்தினர், இராணுவத்தின் தீயணைப்புப் பிரிவினர் ஆகியோர் தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்ததுடன், சுமார் 6 மணித்தியாலயங்களுக்குப் பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. எனினும் பொருட்கள் மற்றும் ஆவணங்கள் என அனைத்தும் தீக்கிரையாகின.

இதேவேளை, இச் சம்பவம் இடம்பெற்றவேளை உரிமையாளர் வீட்டில் இல்லை எனவும் அவரின் மனைவி மற்றும் பிள்ளைகள் இருந்ததாகவும் எனினும் அவர்களுக்கு எந்தவித காயங்களும் ஏற்படாமல் காப்பாற்றியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தீயால் ஏற்பட்ட சேத விபரங்கள் இதுவரை கணக்கிடப்படவில்லை எனவும் தீ ஏற்பட்டமைக்கான காரணம் குறித்தும் கண்டறியப்படாத நிலையில், லிந்துலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# கொள்வனவு செய்யப்பட்ட புகையிரத இயந்திரங்கள் எவ்வாறு பழுதடைந்தன?

## விரைவில் அறிவிப்பேன்-அமரவீர

(கொழும்பு)

வெளிநாட்டிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட புகையிரத இயந்திரங்கள் பழுதானமை குறித்து விரைவில் சபைக்கு அறிவிப்பதாகவும் பயன்பாட்டுக்கு உதவாத புகையிரத பெட்டிகளை மீண்டும் திருத்தியமைக்கும் செயற்பாட்டுக்காக மொத்தமாக 1310.74 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து சேவைகள் முகாமைத்துவ அமைச்சர் மகிந்த் அமரவீர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தில் ஐக்கிய தேசிய் கட்சியின் உறுப்பினர் ஹேசா விதானகே எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில், அமைச்சர் இதனைக் கூறினார்.

கடந்த 2010 தொடக்கம் இதுவரை காலம் சேவையிலிருந்து அகற்றப்பட்ட புகையிரத பெட்டிகளின் எண்ணிக்கையானது 2401 ஆகும். இவ்வாறு அகற்றப்பட்ட பெட்டிகளில் திருத்தியமைத்து மீண்டும் இணைக்கப்பட்ட பெட்டிகளின் எண்ணிக்கை 2084 ஆகும். அமைச்சு மற்றும் இரு தனியார் நிறுவனங்களின் உதவியுடன் இவை திருத்தி அமைக்கப்பட்டன. அரசாங்கத்தினால் 9805 மில்லியன் ரூபாய்கள் இதற்காக ஒதுக்கப்பட்டது.

1505 மில்லியன் ரூபாய் குறித்த தனியார் நிறுவனத்தின் மூலமாக ஒதுக்கப்பட்டு திருத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதேபோல் அண்மையில் கொள்வனவு செய்யப்பட்ட புகையிரத இயந்திரங்கள் பழுதடைந்து பாவனையிலிருந்து நீக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் உரிய அதிகாரிகளிடம் நான் காரணங்களை கேட்டுள்ளேன். வெகு விரைவில் அது குறித்த தகவல் கிடைக்கும் என நம்புகின்றேன் எனத் தெரிவித்தார்.

எவ்வாறிருப்பினும் பயன்பாட்டுக்கு உகந்த இயந்திரங்கள் என்பதையும் ஆராய்ந்தே இவற்றை கொள்வனவு செய்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-7)

# தைப்பொங்கல் விழா இன்று

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் மாவட்ட செயலகமும் ஊர்காவற்றுறை பிரதேச செயலகமும் தம்பாட்டி காந்திஜி நாடக மன்றம் இணைந்து நடத்தும் தைப்பொங்கல் விழா இன்று 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் தம்பாட்டி பொது மண்டபத்தில் நாடக மன்றத் தலைவர் ஜெயக்குமார் தலைமையில் இடம்பெறும். இதில் பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் திருமதி மஞ்சுளா மதீசன் கலந்து கொள்வார். (இ-5-105)

# ஊடகவியலாளர்களுக்கு எதிராக அச்சுறுத்தல்; பக்கச்சார்பற்ற விசாரணை நடத்த வேண்டும்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு ஊடகவியலாளர்களுக்கு எதிராக விடுக்கப்பட்ட உயிரச்சுறுத்தல் தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம் கோரிக்கை விடுத்தது.

அண்மையில் மட்டக்களப்பு ஊடக மையத்தில் சில ஊடகவியலாளர்களுக்கு எதிராக துண்டுப் பிரசுரம் மூலம் விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தலை கண்டித்து கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம் ஊடக அறிக்கையொன்றை விடுத்தது.

அந்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. அந்த அறிக்கையில், "மட்டக்களப்பிலிருந்து கொண்டு இங்கு நடைபெறும் விடயங்களை வெளியுலகுக்கு வெளிப்படுத்தி வருகின்ற செய்தியாளர்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்ட துண்டுப் பிரசுர அச்சுறுத்தல் மிகவும் தவறானதொரு விடயமாகும்.

அநாமதேயமாக துண்டுப் பிரசுரங்களை வீசி ஊடகவியலாளர்களின் செயற்பாட்டை நிறுத்துவதற்கும் நசுக்குவதற்குமான முயற்சியாகவே அண்மைய மட்டு. ஊடக அமையத்திற்கு எதிராக விடுக்கப்பட்ட அச்சுறுத்தலை கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம் பார்க்கிறது.

### எச்சரிக்கை! எச்சரிக்கை!



பல்வேறு சிரமங்கள் மற்றும் அழுத்தங்களுக்கு மத்தியில் மக்களுக்கு பிரதேசங்களில் நடைபெறுகின்ற விடயங்களை வெளிப்படுத்திவரும் வேளையில் அச்சுறுத்தல் செயற்பாடுகள் கவலையளிக்கின்ற ஒன்றாகவே பார்க்கப்பட வேண்டும்.

மட்டக்களப்பிலுள்ள செய்தியாளர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்பாடுகள் மக்கள் மத்தியில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. ஊடக சுதந்திரம் என்பது கேட்டுப் பெறவேண்டியதல்ல. இவ்வாறான செயற்பாடுகள் ஊடக சுதந்திரத்துக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தலாகவே அமையும்.

ஊடகச் செயற்பாடுகளுக்கு பாதுகாப்பான சூழல் இருக்க வேண்டும் என்று அனைவரும் கோரி வருகின்ற நிலையில் விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் உண்மையானதும் நேர்மையானதும் நடுவுநிலைமையானதுமான தகவல்கள் வெளிவருவதில் சிக்கலையே ஏற்படுத்தும்.

மட்டு. ஊடக அமையத்தில் வீசப்பட்டிருந்த அச்சுறுத்தல் துண்டுப் பிரசுரம் குறித்து பல்வேறு ஊகங்கள் வெளியிடப்பட்டு வருகின்ற வேளையில், இவ்வாறான விடயங்கள் குறித்து பக்கச்சார்பற்றதும் சரியானதுமான விசாரணைகள் உடனடியாக நடத்தப்பட்டு சம்பந்தப்பட்டவர்கள் வெளிப்படுத்தப்படுவதுடன், தண்டனை வழங்கி ஊடகங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்குமான பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் கடமையாகும்.

அத்துடன், பொதுமக்களின், சமூகத்தின் செய்திகளை வெளிப்படுத்தி வருகின்ற செய்தியாளர்களுக்கு எதிராக ஏற்படுத்தப்படும் இதுபோன்ற அச்சுறுத்தல் சம்பவங்கள் நடைபெறாமலிருப்பதற்கான நம்பிக்கையினையும் ஏற்படுத்துதல் வேண்டும்.

அதே நேரத்தில் பொது, சமூக அமைப்புக்களும் பொதுமக்களும் இதுபோன்ற விடயங்களில் குழப்பமடையாது ஊடக உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கான ஒத்துழைப்பை வழங்குதல் வேண்டும்" என அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டது. (இ-7)

# சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம்-மயிலணி ஸ்ரீ முத்துமாரி அம்மன் (வடலியம்மன்) திருக்கோவில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை ஆலய பிரதான மண்டபத்தில் முற்பகல் 11 மணியளவில் சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் சிறப்புச் சொற்கொழிவு இடம்பெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 31 ஆம் திகதி இளம் சைவப்புலவர் சிவநெறிச்செம்மல் க.கைலவாசன் "வரம் பல நல்கிடும் வரலட்சுமி", முதலாம் திகதி சைவப்புலவர் சிவநெறிச்செம்மல் கா.கமலநாதன் "காரடையா நோன்பு", இரண்டாம் திகதி சைவப்புலவர் ஏ.அனுசாந்தன் "மண் களிக்கும் பச்சை வண்ணம்", 3 ஆம் திகதி இளம்சைவப்புலவர் சிவநெறிச் செம்மல் த மனோஜ்குமார் "வல்லமை தாராயோ", 4 ஆம் திகதி இளம் சைவப்புலவர் சிவநெறிச் செம்மல் ச.நவநீதன் "கேதார கௌரி விரத மகிமை", 5 ஆம் திகதி இளம் சைவப்புலவர் சிவநெறிச் செம்மல் த.மனோஜ்குமார் "ஆடிப்பூர மகிமை", 6 ஆம் திகதி சைவப்புலவர் சிவநெறிச் செம்மல் பொன் சந்திரவேல் "நவராத்திரியும் நவசக்தி வழிபாடும்", 7 ஆம் திகதி இளம் சைவப்புலவர் சிவநெறிச்செம்மல் க.கைலவாசன் "குமாரசம்பவம் பாடிய காளிதாசர்" ஆகிய சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளன. (இ-7)

# விடுமுறையில் சென்ற சீனர்கள் இலங்கைக்கு மீள வருவதை அரசு இடைநிறுத்த வேண்டும்!

## ஐ.தே.க. அவசர கோரிக்கை

(கொழும்பு)

**இலங்கையில் தொழில் புரியும் சீனர்கள் நாட்டிற்கு வருவதை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்கின்றோம் என ஐக்கிய தேசியக் கட்சியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் அமரசேன தெரிவித்தார்.**

எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் அதிகளவிலான சீனர்கள் தொழில் நிமித்தம் வசித்து வருகின்றனர். இந்நிலையில் அவர்களுடைய புத்தாண்டு பண்டிகை விடுமுறைக்காக அனைவரும் சீனாவிற்கு சென்றுள்ளனர்.

அவர்கள் சீனாவிலிருந்து மீண்டும் இலங்கைக்கு வரும் போது கொரோனா வைரஸின் தாக்கத்திற்கு உள்ளாகியிருப்பார்களாயின் அது நாட்டிற்கு பெரும் ஆபத்தான நிலைமையை ஏற்படுத்தும் .

எனவே, இலங்கையில் தொழில் புரியும் சீனர்கள் நாட்டிற்கு வருவதை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கின்றோம்.

சீனாவின் கொரோனா வைரஸின் தாக்கம் உலகளாவிய ரீதியில் பேசும் பொருளாக மாறியுள்ளதுடன், அச்ச நிலைமையையும் தோற்றுவித்துள்ளது. அதிலிருந்து எமது நாட்டு மக்களை பாதுகாத்துக்கொள்ள வேண்டியது அவசியமானதாகும்.

ஆகவே, இவ்வாறான நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சீனாவில் கல்வி பயிலும் இலங்கை மாணவர்களை நாட்டிற்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளார். ஆயினும் அவர்கள் நாடு திரும்புவதற்கான விமான சீட்டிற்கான அரைவாசி சலுகையையே வழங்க தீர்மானித்துள்ளனர்.

வறிய குடும்பத்தை சேர்ந்த மாணவர்களே அங்கு சென்று



கல்வி பயில்கின்றனர். இந்நிலையில் , உடனடியாக மீண்டும் நாடு திரும்புவதற்கு தேவையான பணத்தை அவர்களால் திரட்ட முடியாத நிலைமை ஏற்படும். ஆகவே அவர்கள் நாடு திரும்புவதற்கான முழு பணத்தையும் அரசாங்கம் வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் ராஜித நேற்று வாக்குமூலம்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன நேற்று குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் வாக்குமூலம் ஒன்றை வழங்கினார்.

கடந்த ஆண்டு நவம்பரில் நடைபெற்ற சர்ச்சைக்குரிய 'வெள்ளை வான்' ஊடக சந்திப்பு தொடர்பாகவே அவர் நேற்று திங்கட்கிழமை வாக்குமூலத்தை வழங்கினார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன கடந்த மாத இறுதியில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில் கடந்த டிசெம்பர் 30 ஆம் திகதி, முன்னாள் சுகாதார அமைச்சரை பிணையில் விடுவிக்க கொழும்பு நீதவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

இருப்பினும், நாடாளுமன்ற உறுப்பினருக்கு பிணை வழங்கிய நீதவான் நீதிமன்றத்தின் முடிவை எதிர்த்து சட்டமா அதிபர் ஜனவரி 8 ஆம் திகதி அன்று திருத்த விண்ணப்பத்தை தாக்கல் செய்திருந்தார்.

ராஜித சேனாரத்னவுக்கு பிணை வழங்கிய உத்தரவுக்கு எதிராக சட்டமா அதிபர் முன்வைத்த மீளாய்வு மனு எதிர்வரும் மார்ச் மாதம் 5 ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சுதந்திர தினத்தன்று வீடுகளில் தேசியக்கொடியை ஏற்றுங்கள்

## அரசாங்கம் கோரிக்கை

(கொழும்பு)

நாட்டின் 72 ஆவது சுதந்திர தினமான பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதியன்று அனைத்து வீடுகளிலும் மற்றும் வர்த்தக நிலையங்களிலும், அலுவலகங்களிலும் தேசியக் கொடியை ஏற்றுமாறு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு கோரிக்கை விடுத்தது.

மேலும், அன்றைய தினம் வீடுகளில் மரக்கன்றுகளை நாட்டுமாறும் அழைப்பு விடுக்கப்பட்டது. சுதந்திர தினத்தை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்டுள்ள முன்னோட்ட நிகழ்ச்சிகள் எதிர்வரும் 31ஆம் திகதியும், பெப்ரவரி மாதம் முதலாம், 2ஆம், 3 ஆம் திகதிகளிலும் இடம் பெறவுள்ளன.

இதற்கமைவாக, விசேட வாகனப் போக்குவரத்து ஒழுங்கமைப்புக்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பறிக்கப்படும் வாழ்வாதாரத்தை மீட்டுத் தாருங்கள் கடற்றொழிலாளர்கள் அமைச்சர் டக்ளஸிடம் கோரிக்கை

(மாளிகாவத்தை)

சட்டவிரோத மீன்பிடி முறைகள் பயன்படுத்தப்படுவதனால் சிறுதொழிலாளர்களாகிய தாங்கள் பாதிக்கப்பட்டிருப்பதோடு கடல் வளங்களும் அழிக்கப்படுவதாக முறையிட்ட பூநகரி பிரதேச கடற்றொழிலாளர்கள், உடனடியாக சட்டவிரோத மீன்பிடி முறைகள் அனைத்தையும் கட்டுப்படுத்தி தங்களுடைய வாழ்வாதாரத்தை மீட்டுத் தருமாறும் வேண்டுகோள் விடுத்தனர்.



மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அமைச்சிற்கு சென்ற பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் மற்றும் அம்பாறை, காலிப் பிரதேசங்களின் கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேற்று சந்தித்து தாங்கள் எதிர்கொள்ளுகின்ற ஜீவனோபாய அச்சுறுத்தல்கள் தொடர்பாக எடுத்துக் கூறினர்.

இதன்போது, பூநகரிப் பிரதேச கடற் பிரதேசசத்தினுள் பிரவேசிக்கின்ற ஏனைய பிரதேச மீனவர்கள், அனுமதியற்ற சிலிண்டர்கள் - வெளிச்சம் பாய்ச்சுதல் - மற்றும் அனுமதிக்கப்படாத இழுவைப் படகுகள் போன்ற சட்டவிரோத மீன்பிடி முறைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதனால் சிறுதொழிலில் ஈடுபடுகின்ற பிரதேச மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதுடன் கடல் வளமும் பாரிய அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளதாக அமைச்சரிடம் முறையிடப்பட்டது.

குறித்த முறைப்பாடு தொடர்பாக அவதானம் செலுத்திய அமைச்சர், பூநகரிப் பிரதேசத்திற்கு நேரடியாக விஜயம் மேற்கொண்டு நிலைமைகளை ஆராய்வதுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் கடற்படையினரும் பங்குபற்றும் வகையில் கலந்துரையாடலை ஒழுங்கு செய்து அதனூடாக சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுகின்றவர்களை தடுப்பது தொடர்பாக தீர்க்கமான முடிவுகள் மேற்கொள்ளப்படும் என்று உறுதியளித்தார்.

அதேபோன்று அமைச்சர் டக்ளஸ் தேவான்ந்தாவை சந்தித்த அம்பாறை மாவட்ட மீனவர்கள், கரையோர சூழலியல் பாதுகாப்பு திணைக்களத்தினர் மேற்கொள்ளுகின்ற கட்டுப்பாடுகள் காரணமாக கடற்றொழிலாளர்கள் பல்வேறு இடையூறுகளை எதிர்கொள்வதாகவும் குறிப்பாக கடற்றொழிலாளர்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றுவதற்கு தேவையான கிணறுகள் மற்றும் மலசலகூடம் போன்றவற்றைக்கூட அமைப்பதற்கு முடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவித்தனர்.

காலிப் பிரதேசத்தில் இருந்து அமைச்சிற்கு வருகை தந்திருந்த கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள், கடற்றொழில் அமைச்சராக தற்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இருந்த காலத்தில் தடைவிதிக்கப்பட்ட மீன்பிடி முறைகள் கடந்த அரசாங்க காலத்தில் தளர்த்தப்பட்டமையால் தாங்கள் பல்வேறு இடையூறுகளை எதிர்கொள்வதாகத் தெரிவித்தனர்.

கடற்றொழிலாளர் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளை கேட்டறிந்த அமைச்சர் சம்பந்தப்பட்ட பிரதேசங்களுக்கு நேரடியாக விஜயம் செய்து பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்து நியாயமான தீர்வுகளைப் பெற்றுத் தருவதாக உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நால்வருக்கும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்படவில்லை

## மருத்துவ பகுப்பாய்வு அறிக்கை வெளியீடு

(கொழும்பு)

கொழும்பு ஐ.டி.எச்.வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த 4 பேர் தொடர்பிலான மருத்துவ பகுப்பாய்வு அறிக்கை நேற்று வெளியானது.

குறித்த பகுப்பாய்வு அறிக்கையில்இந்த நால்வருக்கும்கொரோனா வைரஸ் தொற்று ஏற்படவில்லை என மருத்துவ ஆய்வு நிறுவன பணிப்பாளர் தெரிவித்தார்.

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனரா என்ற சந்தேகத்தின் பேரில் அங்கொடை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நான்கு பேர் கொரோனா வைரஸின் தாக்கத்துக்குள்ளாகவில்லை என முதலாம் கட்ட வைத்திய பரிசோதனையில் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டது.

மேலும் பொரளை வைத்திய ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்ட நான்கு பேரின் குருதி மாதிரியில் கொரோன்ா வைரஸ் தொற்று இல்லையென்பது உறுதி செய்யப்பட்டது.

இந்நிலையிலேயே நேற்று வெளியாகிய மருத்துவ பகுப்பாய்வு அறிக்கையிலும் குறித்த நால்வருக்கும் கொரோனா தொற்று ஏற்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டது. (இ-7)

# ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற வேறுபாடின்றி அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும்

## வடக்கு ஆளுநர் சார்ள்ஸ் தெரிவிப்பு

(மன்னார்)

மக்களுக்கான சேவைகளை முடக்காது செயற்படுவதற்கு ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற வேறுபாடுகள் இல்லாமல் அனைவருமே இணைந்து ஆதரவு வழங்க வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் பீ.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

வடமாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி கொடை நிதி உதவியுடன் மன்னார் அடம்பன் பகுதியில் அமைக்கப்பட்ட மாந்தை வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க அலுவலக கட்டடம் திறக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், "கூட்டுறவே நாட்டுறவு" என்று சொல்வார்கள். நீங்கள் எல்லோரும் இணைந்தால் தான் ஒரு பிரதேசத்தை, மாவட்டத்தை, ஒரு மாகாணத்தை உயர்த்த முடியும்என்ற சிந்தனை உங்கள் அனைவருடைய மனதிலும் இருக்கின்றது.

மக்களினால் தெரிவு செய்யப்பட்டவர்கள் மக்களின் பிரதிநிதிகளாக, மக்களின் சேவைகளை முன்னெடுப்பவர்களாக இருக்க வேண்டும் என்பதுதான் அனைவருடைய எதிர்பார்ப்பு.

கடந்த வாரத்தில் இந்த மாகாணத்திலே இரண்டு பாரிய பிரச்சினைகள் இடம்பெற்றுள்ளன. யாழ். மாநகர பகுதிகளில் மூன்று நாட்களாக குப்பைகளை எடுக்கவில்லை. அதேபோல வவுனியா நகரத்திலே தொடர்ந்து ஒரு வாரம் குப்பைகள் அகற்றப்படவில்லை.

இதற்கு பின்னணியாக என்ன காரணங்கள் இருந்தாலும் சபைகளிலே இருக்கின்ற அனைவரும் அதாவது ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என்ற வேறுபாடுகள் இல்லாமல் அனைவருமே இணைந்து மக்களுடைய சேவையினை முடக்காது செயற்படுவதற்கு ஆதரவு வழங்க வேண்டும். இதனைத் தான் நாங்கள் உங்களிடம் இருந்து எதிர்பார்க்கின்றோம்.

அண்மையில் கொழும்பில் ஜனாதிபதி, ஆளுநர்கள் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தி இருந்தோம்.

அக்கலந்துரையாடலின் போது ஜனாதிபதி மிக முக்கியமாக எங்களிடம் கூறிய விடயம், நாட்டில் இருக்கின்ற அனைத்து விவசாயிகளினுடைய நெல்லையும் உரிய விலையில், உரிய நேரத்தில் கொள்வனவு செய்யும்படி வலியுறுத்தி உள்ளார்.

அதற்கான சுற்றுநிருபங்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. நெல்லின் விலையும் ஜனாதிபதியினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

உற்பத்தி செய்யப்படும் நெல் சரியாக காயவைக்கப்பட்டால் ஒரு கிலோ 50 ரூபாவிற்கும், ஈரப்பதன் கொண்ட நெல் ஒரு கிலோ 47 ரூபாவிற்கும் நெல்லை கொள்வனவு செய்ய சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

அரச அதிபரின் அனுசரணையுடன் கூட்டுறவுச் சங்கங்கள் உடனடியாக நெல்லை குறித்த விலைக்கே கொள்வனவு செய்வதற்கான உத்தரவை வழங்கியுள்ளேன்.

அவர்களுக்கான நிதி வசதிகள், நிதி ஏற்பாடுகள் அரச அதிபர், பிரதம செயலாளர் ஆகியோரின் ஆலோசனைகளுடன் உடனடியாக செய்து கொடுக்கப்படும் என மேலும் தெரிவித்தார். (9-285)

# 700 மில்லியன் ரூபா நிதியில் வவுனியாவில் அபிவிருத்தி

(குருமன்காடு)

வவுனியா நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியொதுக்கீட்டில் பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இவ்விடயம் தொடர்பான கலந்துரையாடலொன்று வவுனியா நகரசபை மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள், நகரசபை தலைவர், உபதலைவர், உறுப்பினர்கள், நகரசபை செயலாளர், உயர் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், பயிற்சி மாணவர்கள் மற்றும் வர்த்தக சங்கத்தினர் கலந்து கொண்டனர்.

இதன்போது எதிர்காலத்தில் வவுனியாவில் தேவைப்படும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக ஆலோசனைகள் பெறப்பட்டன.

வவுனியா நகரசபையின் சிபாரிசுக்கு அமைய ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியில் 700 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அதில் வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக 450 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் கடைத்தொகுதியொன்றும் வவுனியா நகரசபை பொதுப் பூங்காவில் 150மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் திறந்த வெளி அரங்கும் நகரசபை பொது பூங்காவில் 100 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் அருங்காட்சியகமும் கலாசார மண்டமும் அமையப்படவுள்ளது. (9-250)



**பாவற்குளம் அவரன் துளாவ பகுதி அபிவிருத்தி உத்தியோகத்தர் வீ.ஶ்ரீதரனின் கோரிக்கைக்கு அமைவாக வெளிச்சம் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் பிரதேசத்தில் மிகவும் வறிய நிலையில் உள்ள 23 மாணவர்களுக்கு புலம் பெயர் தேசத்தில் இருந்து வருகை தந்த நடராஜா தம்பதிகளின் நிதி பங்களிப்புடன் கடந்த வாரம் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் கிராம உத்தியோகத்தர் திருமதி. அனோமா, புலம்பெயர் தேசத்தில் இருந்து வருகை தந்த் நடராஜா தம்பதிகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் வீ.ஶ்ரீதரன், கோகுலன் வெளிச்சம் அறக்கட்டளையின் தலைவர் பா.லம்போதரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (படம்:-நெளுக்குளம் செய்தியாளர்)**

# வவு. கிளி. மாவட்டங்களுக்கு புதிய அரச அதிபர்கள் பதவியேற்பு



வவுனியா




கிளிநொச்சி

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபராக எஸ்.எம். சமன் பந்துலசேன நேற்றுத் திங்கட்கிழமை பதவியேற்றுள்ளார்.

இதுவரை வவுனியா அரச அதிபராக இருந்த ஐ.எம்.கனீபா பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் நிலையில், அநுராதபுர மாவட்டத்தின் உதவி அரச அதிபராகவும் பின்னர் வடமத்திய மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக இருந்த எஸ்.எம். சமன் பந்துலசேன, புதிய அரச அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தின் புதிய அரச அதிபராக ரூபவதி கேதீஸ்வரன் நேற்று கடமைகளை பொறுப்பேற்றார். மீள்குடியேற்றம் முதல் 2015ஆம் ஆண்டு வரை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராக செயற்பட்ட அவர் பின்னர் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபராக கடமையாற்றி வந்தார்.

இந்த நிலையில் மீண்டும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபராக தனது கடமைகளை பொறுப்பேற்றுள்ளார். (9-100-299-250-350)

# 120 லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைது

(தருமபுரம்)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டைக்காடு பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த நபர் ஒருவர் நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பொலிஸார் தேடுதல் மேற்கொண்ட போது குறித்த நபர் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்துள்ளார். அவரிடம் இருந்து 120 லீற்றர் கசிப்பும் 600 லீற்றர் கோடாவும் கைப்பற்றப்பட்டுள்ளது. மேலதிக நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுளளனர். (9-316)

# ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கோரி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் போராட்டம்






(நெளுக்குளம்)

வவுனியாவில் காணாமல் போனவர்களின் உறவினர்கள் தமது உறவுகளின் உண்மை நிலையினை வெளிப்படுத்துமாறு கோரியும் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கோரியும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்தனர்.

வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களாலேயே குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பத்திரிகை சுதந்திரம் என்பது ஜனநாயகத்தின் முதுகெலும்பாகும், ஒடுக்கப்பட்ட பத்திரிகை சுதந்திரம் இராணுவ ஆட்சி அல்லது சர்வாதிகாரத்திற்கு வழிவகுக்கும் போன்ற பதாகைகளை தாங்கியவாறு போராட்டத்தை முன்னெடுத்தனர். (9-299)




# கிளி. மேலதிக அரச அதிபர் கடமைகள்ள பொறுப்பேற்றார்

(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கான மேதிக அரச அதிபராக கனகராஜா சிறிமோகனன் தனது கடமைகளை நேற்று பொறுப்பேற்றார். கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபராக கடமையாற்றிவந்த எஸ். சத்தியசீலன் திறைசேரிக்கு மாற்றம் பெற்று செல்லும் நிலையில் குறித்த வெற்றிடத்திற்காக வடமாகாண தொழிற்றுறைத் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளராகவும், தேசிய அருங்கலைகள் பேரவையின் வடமாகாண ஒருங்கிணைப்பு உத்தியோகத்தராகவும் செயற்பட்ட கனகராஜா சிறிமோகனன் நேற்று தனது கடமைகளை பொறுப்பேற்றார். (9-100)

## யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில்

# பௌத்த விகாரை நிர்மாண பணிகள் பூர்த்தி

## ஏனைய மத வணக்கஸ்தலங்களை அமைக்கும் முயற்சியில் சம்பந்தப்பட்டவர்கள் அசமந்தம்

(முறிகண்டி)

கிளிநொச்சியில் அமைந்துள்ள யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பௌத்த விகாரைக்கான கலசம் வைக்கும் நிகழ்வு நேற்று இடம் பெற்றது.

இதேவேளை, குறித்த பல்கலைக்கழக வளாகத்தில் ஏனைய வணக்க ஸ்தலங்கள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். நான்கு வணக்க ஸ்தலங்கள் அமைப்பதற்கு தலா ஒரு ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள் ளது. குறித்த ஒதுக்கப்பட்ட இடத்தில் ஏனைய வணக்க ஸ்தலங்களை அமைப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் இன்னும் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என மாணவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

நான்கு வணக்க ஸ்தலங்களும் சம அளவு உயரத்தை கொண்டதாக அமைய வேண்டும் என்பது பல்கலைக்கழகத்தின் ஏற்பாடாகும். இந்த நிலையில் இந்து வணக்கஸ்தலம் அமைப்பதற்கு எவ்வகையான தெய்வ வழிபாட்டினை மேற்கொள்வது என்பது தொடர்பான தீர்மானம் எடுக்கப்படாமலும் ஏற்கனவே அமைக்கப் பட்டிருந்த பிள்ளையார் கோவிலை கட்டுவதற்கான இழுபறி நிலை காணப்படுகின்றமையாலும் குறித்த வணக்கஸ்தலம் அமைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.



இதேவேளை கிறிஸ்தவ வணக்கஸ்தலம் அமைப்பதற்கு கத்தோலிக்க மறைமாவட்டம் ஏற்பாடுகளை செய்திருந்தது. குறித்த ஏற்பாடுகளில் ஏற்பட்ட தாமதம் தொடர்பிலும் பொதுவான நிலைப்பாடு எடுப்பது தொடர்பிலும் தென்னிந்திய திருச்சபையின் பேராயர் அதிவண.கலாநிதி டானியல் செ.தியாகராஜா பல்கலைக்கழக பீடாதிபதி ஏ.அற்புதராஜாவுடன் பேசியிருந்தார். எனினும் குறித்த வணக்கஸ்தலத்திற்கான வரைபடம் தயாரிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட போதிலும் அது இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அதேபோன்று இஸ்லாமிய வணக்க ஸ்தலத்தை அமைப்பதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் பௌத்த மாணவர்களின் முயற்சியினாலும் சமயம் சார்ந்தவர்களின் செயற்பாடுகளினாலும் பௌத்த விகாரை அமைக்கப்பட்டு நேற்று முன்தினம் கலசம் வைக்கும் நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. குறித்த வணக்க ஸ்தலம் பௌத்தர்களின் வணக்கத்திற்காக நேற்று முன்தினம் கலசம் வைக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (9-100-312)

# இராணுவ அதிகாரிகளை சிவில் நிர்வாகத்தில் இணைப்பது மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தும்

## வட கிழக்கு முன்னாள் முதலமைச்சர் தெரிவிப்பு

(நெளுக்குளம்)

தமிழ் மக்களுடைய மனங்களை வெல்லுவதற்கு முயற்சிப்பதாக இருந்தால் இராணுவ அதிகாரிகளை சிவில் நிர்வாகங்களிலோ அல்லது மக்களோடு நேரடியாக தொடர்புடைய விடயங்களிலோ நியமிப்பதை தவிர்த்து கொள்வது மிக நல்ல விடயம் என முன்னாள் வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சர் அ.வரதராஜப் பெருமாள் தெரிவித்தார்.

தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் ஆதரவாளர்களிடையே வவுனியாவில் நேற்று முன்தினம் பிரத்தியேக அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் மத்தியில் தற்போது அச்ச உணர்வு ஏற்படுவது என்பது நியாயமானது தான். ஏனென்றால் இராணுவ அதிகாரிகளை நிர்வாகங்களில் போடுகிறார்கள். ஆனால் உலகத்தை பொறுத்தவரையில் எல்லா ஜனநாயக நாடுகளிலும் எங்களுக்கு பக்கத்தில் இருக்கிற இந்தியாவிலே போய் பார்த்தீர்கள் என்றாலும் கூட அவ்வாறே நியமித்திருக்கிறார்கள்.

அரசை பொறுத்தவரையில் இராணுவ அதிகாரிகள் மிகச் சிறந்த நிர்வாகிகள். ஏனென்றால் ஆயிரக்கணக்கானவர்களை கட்டி மேய்த்தவர்கள். அவர்கள் நிர்வாகத் திறமை கொண்டவர் என்று அரசு கருது




கிறது. அந்த வகையில் தனிப்பட்ட வெறும் கம்பனிகளில் கூட இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்றவுடனே தன்னுடைய கம் பனிக்கு அழைத்து நிர்வாகத்தில் பொறுப்பு கொடுப்பது என்பது உலகம் முழுவதும் நடக்கிறது.

இங்குள்ள மக்களுடைய மனநிலையில் பிரச்சினை என்னவென்றால் கடந்த காலத்தில் யுத்த நிலைமையில் ஏற்பட்ட அந்த மனோபாவம் அதிலிருந்து இராணுவத்தை போடக்கூடாது என்ற எண்ணத்தை கொண்டிருக்கிறார்கள். அந்த எண்ணத்தை அரசாங்கமும் கருத்திலெடுத்து செயற்பட வேண்டியது அவசியம்.

ஏனென்றால் ஜனாதிபதியே சொல்லியிருக்கிறார் தனக்கு வாக்குப் போடாவிட்டாலும் பரவாயில்லை தமிழ் மக்களுடைய மனங்களை வெல்லுவதற்கு தான் முயற்சிப்பேன் என்று. அப்படி தமிழ் மக்களுடைய மனங்களை வெல்லுவதற்கு முயற்சிப்பதாக இருந்தால் இந்த இராணுவ அதிகாரிகளை இங்கு சிவில் நிர்வாகங்களிலோ அல்லது மக்களோடு நேரடியாக தொடர்புடைய விடயங்களிலோ நியமிப்பதை தவிர்த்து கொள்வது மிக நல்ல விடயம் என்றுதான் நாங்கள் கருதுகிறோம். அவ்வாறான சந்தர்ப்பங்கள் வருகின்ற பொழுது அரசாங்க தரப்பினருக்கு நாங்கள் எடுத்துக்கூற இருக்கின்றோம்.

ஜனாதிபதித்தேர்தலில் நாங்கள் கோத்தபாயவிற்கு ஆதரவு அளிப்பது என்பது ஒரு கொள்கை ரீதியான வடிவமாகத்தான் .எடுத்தோம். எந்த வகையிலும் அவர்களுடைய பங்குதாரர்கள் அல்ல நாங்கள். அவ்ருடைய அணியைச் சேர்ந்தவர்களுமல்ல, நாங்கள் அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களுமல்ல.

எங்களை பொறுத்தவரையில் ஐக்கிய தேசியக் கட்சி என்பது மக்களை வெளிப்படையாக ஏமாற்றிக் கொண்டு வந்திருக்கிறது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பினுடைய கை யிலே தான் ஐந்து வருடங்கள் ஐக்கிய தேசிய கட்சியினுடைய ஆட்சி இருந்தது. அப்பொழுது கூட எதுவுமே செய்யாமல் அந்த ஐக்கிய தேசிய கட்சியைக் கொண்டு தமிழ்த்தேசிய கூட்டமைப்பு எதையுமே செய்யவில்லை என மேலும் தெரிவித்தார். (9-299)

## வவுனியாவில் பதினொரு பேர் கைது






(நெளுக்குளம்)


வவுனியாவில் ஏ-9 வீதியில் இராணுவமும் பொலிஸாரும் இணைந்து மோப்ப நாய் சகிதம் சோதனை நடவடிக்கையினை கடந்த இரு தினங்களாக மேற்கொண்டிருந்தனர்.


வவுனியா புளியங்குளம், ஓமந்தை மற்றும் அதனையண்டிய பகுதிகளிலேயே இவ்வாறு அதிகளவான பொலிஸாரும் இராணுவமும் இணைந்து தேடுதல் நடத்தியிருந்தனர். சந்தேகத்திற்கிடமாக வீதியால் செல்லும் பேருந்துகள் மற்றும் வாகனங்கள் நிறுத்தி சோதனை செய்யப்பட்டிருந்ததுடன் மோப்ப நாயின் மூலமும் சோதனையினை மேற்கொண்டிருந்தனர்.

இந்நடவடிக்கையில் 33 கிலோகிராம் கஞ்சா, 35 முதிரை பலகைகள் மீட்கப்பட்டதுடன் பதினொரு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (9-299)







யாழ்.இந்தியத் துணைத்தூதரகமும் இந்திய கலாசார உறவுகளுக்கான பேராயம் மற்றும் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து ஏற்பாடு செய்த கலை நிகழ்வுகளின் முதல் நாள் நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சி கூட்டுறவு கலாசார மண்டபத்தின் இராசநாயகம் அரங்கில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.இந்திய துணைத் தூதுவர் ச.பாலச்சந்திரன் கலந்து கொண்டதுடன், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் சி.சத்தியசீலன், வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை முன்னாள் அமைச்சர் த.குருகுலராஜா, ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:-முறிகண்டி, கண்டாவளை செய்தியாளர்கள்)

# குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிர்ப்பு; இந்தியாவில் மனிதச் சங்கிலிப் போராட்டம்







(டில்லி)

மத்திய அரசு கொண்டு வந்துள்ள குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை திரும்பப் பெறுமாறு வலியுறுத்தி கேரள மாநிலத்தில் 620 கிலோமீற்றர் தூரம்வரை மனிதச் சங்கிலிப் போரட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆளும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் இடதுசாரி ஜனநாயக முன்னணி சார்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்ட இந்த மனிதச் சங்கிலிப் போராட்டம் வடக்கு கேரளாவின் காசர்கோடு நகரில் இருந்து தெற்கே உள்ள களியக் காவிளை வரை தொடர்ந்தது.

ஏறக்குறைய 60 இலட்சம் முதல் 70 இலட்சம் மக்கள் வரை இந்த மனிதச் சங்கிலியில் பங்கேற்றார்கள் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மத்திய அரசு கொண்டு வந்துள்ள குடியுரிமைத் திருத்தச் சட்டத்துக்கு எதிராகக் கடந்த டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி கேரள அரசு சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேறியது.

மேலும், உச்ச நீதிமன்றத்தில் குடியுரிமைச் சட்டத்துக்கு எதிராக வழக்கும் தொடர்ந்துள்ளது.

மேலும், இலட்சக்கணக்கான பொதுமக்களும், முக்கிய அதிகாரிகளும், மாணவ, மாணவிகளும் இந்த மனிதச் சங்கிலியில் பங்கேற்றனர். (ஐ-2)

# அகதிகள் நிறைந்த நாடாக இந்தியா மாறும்

## ஐரோப்பிய ஒன்றியம் கூறுகிறது



(பிரசல்ஸ்)

குடியுரிமைத் திருத்தச் சட்டத்தால் உலகிலேயே அதிக அகதிகள் நிறைந்த நாடாக இந்தியா மாறும் என ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்தது.

இது குறித்து ஐரோப்பிய ஒன்றியத்தின் 5 அமைப்புகள் கொண்டு வந்த தீர்மானத்தின் மீதான விவாதம் நாளை புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

மத்திய அரசு கொண்டு வந்துள்ள குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிராக நாடு முழுவதும் போராட்டங்கள் நடைபெற்று வரும் நிலையில், ஐரோப்பிய ஒன்றியத்தின் 5 அமைப்புகள் 6 தீர்மானங்களைக் கொண்டுவந்துள்ளன.

இந்திய அரசின் குடியுரிமைத் திருத்தச் சட்டம் ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச மனித உரிமை குறித்த விதிகளுக்கும், இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையே 2005இல் நிறைவேற்றப்பட்ட மனித உரிமை குறித்த ஒப்பந்தத்துக்கும் எதிராக இருப்பதாக தீர்மானங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தால் உலகளவில் அதிக அகதிகள் நிறைந்த நாடாக இந்தியா மாறும் என்றும் இது மிகப் பெரிய மனிதப் பேரிழப்பை ஏற்படுத்தும் என்றும் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டத்துக்கு எதிராக போராடுபவர்களை அழைத்து பேசாமல், பெரும்பாலான தலைவர்கள், அவர்களை மிரட்டுவதாகவும் ஐரோப்பிய ஒன்றியம் கொண்டு வந்துள்ள தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலுக்குப் பிறகு இந்திய அரசாங்கத்தின் செயற்பாடுகள் தேசியவாதம் என்ற இலக்கை நோக்கி செல்வதாகவும், ஜம்மு-காஷ்மீரில் 370ஆவது அரசியல் பிரிவு நீக்கப்பட்டுள்ளதாகவும் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரசல்ஸ் நகரில் கூடும் ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் இந்தத் தீர்மானங்கள் மீது விவாதம் நடைபெற்று, வியாழக்கிழமை வாக்கெடுப்பு நடைபெறவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டவுடன் அது இந்திய அரசு, இந்திய நாடாளுமன்றம் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்து கருத்து தெரிவித்துள்ள இந்தியா, ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களால் இந்திய நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் குடியுரிமைத் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதாகவும், இந்திய குடியுரிமைத் திருத்தச் சட்டம் முற்றிலும் உள்நாட்டு விவகாரம் எனவும் கூறியுள்ளது.

ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்துள்ளவர்கள், அதை நிறைவேற்றுவதற்கு முன்பு முழு விபரங்களை தங்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் எனவும் இந்தியா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# நீ...

# அமெரிக்...

# மீண்டும் ...

(பக்தாத்)

**ஈராக் தலைநகர் பக்...**
**தூதரகத்துக்கு அருகே...**
**தல் நிகழ்த்தப்பட்டமை ...**
**ஏற்படுத்தியுள்ளது. இ...**
**அதிகாரிகள் தரப்பில், ...**
**பக்தாத் அருகே அமை...**
**தூதரகத்தில் நேற்று மு...**
**கிழமை 5 ஏவுகணைத் த...**
**இந்தத்தாக்குதல் காரண...**
**பாதிப்பும் ஏற்படவில்லை" எ...**


இத்தாக்குதல் குறித்து இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

சில நாட்களுக்கு முன்னர் ஈராக்கி...

# சீனாவை ...

# பலி எண்ண...

## போக்கு...



(பீஜிங்)

சீனாவை அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் காய்ச்சலுக்கு இதுவரை 80 பேர் பலியாகி உள்ள நிலையில், பல்வேறு நகரங்களுக்கு போக்குவரத்து சேவை ரத்து செய்யப்பட்டுள்ளது. சீனாவில் புதிய வகை கொரோனா வைரஸ் காய்ச்சல் அந்நாட்டு மக்களிடையே அதிக பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. கடந்த டிசெம்பர் மாத இறுதி

# வெளிநாடு

## நீடிக்கும் பதற்றம்

# ிக்கத் தூதரகம் அருகே

# ் ஏவுகணைத் தாக்குதல்!

**ர் பக்தாத்தில் அமெரிக்க அருகே ஏவுகணை தாக்கு மை அங்கு பதற்றத்தை து. இது குறித்து ஈராக் பில், "ஈராக் தலைநகர் அமைந்துள்ள அமெரிக்கத் ற்று முன்தினம் ஞாயிற்றுக் ணைத் தாக்குதல் நடத்தப்பட்டது. காரணமாக யாருக்கும் எந்தப் லை" எனத் தெரிவிக்கப்பட்டது.**



ந்த ... க்கி ... லிருந்து அமெரிக்கப் படைகள் வெளியேற வேண்டும் என்று இலட்சக்கணக்கான மக்கள் பேரணி சென்றனர். இந்த நிலையில் அமெரிக்கத் தூதரகத்துக்கு அருகே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

ஈராக்கில் ஊழல், வேலையின்மை அதிகரித்து வருவதைத் தொடர்ந்து பிரதமர் ஆதில் அப்துல் மஹ்திக்கு எதிராக பல மாதங்களாக அரசுக்கு எதிரான போராட்டம் நடைபெற்றது. இப்போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் பெரும் பாலானவர்கள் இளைஞர்கள் ஆவர்.

ஈராக்கில் அரசுக்கு எதிராக நடத்தப்பட்ட போராட்டத்தில் 300 இற்கும் அதிகமானவர்கள் பலியாகினர். இந் நிலையில் அமெரிக்கப் படைகளுக்கு எதிரான போராட்டத்தை போராட்டக்காரர்கள் கையில் எடுத்துள்ளனர்.


முன்னதாக, இம்மாத தொடக்கத்தில் ஈராக்கில், ஈரான் புரட்சிப் படையின் தளபதி சுலைமான் அமெரிக்கப் படையால் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# வ சீர்குலைக்கும் கொரோனா

# ணிக்கை 80 ஆக அதிகரிப்பு

## துவரத்து சேவைகள் ரத்து





னா ... பேர் ... கர ... ந்து ... கை ... ட்டு ... படு ... தி ... யில் வுகான் நகரில் கண்டறியப்பட்ட இந்த வைரஸ், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பரவி பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. வெளிநாடுகளுக்கும் இந்த வைரஸ் பரவத் தொடங்கியுள்ளது.


நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள், முதியவர்கள் உள்ளிட்டவர்கள் அதிக அளவில் இந்த வைரசுக்கு பலியாகி உள்ளனர். வைத்தியசாலைகளில் நோயாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது.

கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்கும் வகையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வுகான் நகரம் மட்டுமன்றி பல்வேறு மாகாணங்களில் போக்குவரத்து சேவை ரத்து செய்யப்பட்டுள்ளது. ரயில்வே மற்றும் விமான போக்குவரத்தும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

நீண்ட தூர பயணங்களை தவிர்க்க வேண்டும்என்றும், வைரஸ் பரவாமல் இருக்க முகமூடிகளை அணிந்து கொள்ள வேண்டும் என்றும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ-2)

# கொரோனா வைரஸ் தாக்கத்தின் எதிரொலி

## சீனாவில் இறைச்சி விற்பனை நிலையங்களுக்கு தடை



(பீஜிங்)

அமெரிக்காவில் 5 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். அண்மையில் சீனாவின் ஊஹான் மாநிலத்திற்கு சென்றிருந்தவர்களுக்கே இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டது. அமெரிக்காவின் லொஸ்ஏஞ்சல்ஸ், சிக்காக்கோ, சீட்டில், கலிபோர்னியா மற்றும் பீனிக்ஸ் பகுதிகளிலேயே அவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை சீனாவில் கொரோனா வைரஸ் பரவல் மேலும் அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுவதாக சீன தேசிய சுகாதார ஆணையகம் தெரிவித்துள்ளது. இந்த உயிர்க்கொல்லி குறித்து முழு அளவிலான தரவுகளையும் பெற இதுவரை முடியவில்லை என தேசிய சுகாதார ஆணையகத்தின் அமைச்சர் தெரிவித்தார்.

சீனாவின் மத்திய நகரான வூஹானில் கடல் உணவு விற்பனை செய்யும் நிலையத்தில் கடந்த வருட இறுதியில் இந்த தொற்று வைரஸ் ஆரம்பமாகியுள்ளது. இந்த நிலையத்தில் இருந்தே கடல் உணவு வகைகளுடன், சட்டவிரோதமாக காட்டு விலங்குகளின் இறைச்சியும் விற்பனை செய்யப்பட்டு வந்ததாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அங்கிருந்து இந்த வைரஸ் தொற்று பீஜிங் மற்றும் ஷங்காய் ஆகிய மாநிலங்களுக்கு பரவிய நிலையில், தற்போது அமெரிக்கா, தாய்லாந்து, தென்கொரியா, ஜப்பான், அவுஸ்திரேலியா, பிரான்ஸ் மற்றும் கனடா ஆகிய நாடுகளுக்கும் பரவியுள்ளது. இதேவேளை உயிர்க்கொல்லி நோயானா கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக நாடளாவிய ரீதியில் உள்ள இறைச்சி விற்பனை நிலையங்களை தடை செய்வதற்கு சீன அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய சீனாவில், விலங்கு விற்பனை நிலையங்களிலும் சிறப்பு அங்காடிகள், சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் இணையத்தளம் ஊடாகவும் விலங்குகளின் இறைச்சியை விற்பனை செய்வதற்கு நேற்று முன்தினம் முதல் தடை விதிக்கப்பட்டது. (ஐ-2)

### 7 ஆண்டுகால சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி

# வடகொரியாவை நிறுவிய கிம்சங்கின் மகள் உயிருடன்



(பியாங்யாங்)

வட கொரியாவை நிறுவிய கிம் •சங்கின் மகள் கிம் கியாங், பொதுவெளியில் 7 ஆண்டுகளுக்கு பின் வெளி உலகிற்கு வந்துள்ளார். இவரது கணவர் ராஜ துரோக குற்றஞ்சாட்டப்பட்டு தற்கால வடகொரிய தலைவர் கிம் ஜாங் உன் உத்தரவால் கொல்லப்பட்டார். அதன் பின் பொது வெளியில் தோன்றாமல் இருந்த இவர் புத்தாண்டு கொண்டாட்டத்தில் கலந்து கொண்ட புகைப்படம் தற்போது வெளியாகியுள்ளது.

கணவர் கொல்லப்பட்ட பிறகு கிம் கியாங் நாடு கடத்தப்பட்டிருக்கலாம் அல்லது அவரும் கொல்லப்பட்டிருக்கலாம் எனப் பரவலாகக் கருதப்பட்டு வந்த நிலையில், அந்த ஊகங்களுக்கு இந்தப் புகைப்படம் பதில் அளிப்பதாக அமைந்துள்ளது.

இதேவேளை, இப்படியான சூழ்நிலையில் புத்தாண்டு கொண்டாட்டத்தின் போது கிம் ஜாங் உன் அருகில் அமர்ந்திருக்கும் அவரது புகைப்படம் வெளியாகி இருப்பது, அவர் அரசு அதிகாரத்தில் முக்கிய பங்கு வகிக்கிறாரோ என்ற கேள்வியைத் தோற்றுவித்துள்ளது. கிம் கியாங், தற்போதைய வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னின் தந்தை கிம் ஜாங் இல்லின், தங்கை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# வடக்கில் பாராளுமன்றத் தேர்தலில் சு.க.சார்பில் சுரேன் ராகவன் போட்டி



(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துப்படுத்தி வடமாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் போட்டியிடவுள்ளதாக தெரிய வருகிறது.

வடமாகாணத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர்களில் ஒருவராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் இவர் நியமிக்கப்படவுள்ளதாக தெரிய வருகிறது. (இ-10)

# மகிந்தவின் ஆட்சிக்காலத்தில்

# பிணைமுறி மோசடி இடம்பெறவில்லை

## முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் உறுதி

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் மத்திய வங்கி பிணைமுறி கொடுக்கல்-வாங்கலில் மோசடி இடம்பெற்றதாக தற்போது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் பொய்யானவை. இந்த மோசடி தொடர்பில் கடந்த அரசாங்கம் முன்னெடுத்த விசாரணை நடவடிக்கைகள் பயனற்றவையாகும் என மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.**



கடந்த அரசாங்கத்தில் அதாவது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான 2005 தொடக்கம் 2014 வரையிலான காலப்பகுதியில் மத்திய வங்கி பிணைமுறி கொடுக்கல்-வாங்கலில் மோசடி இடம்பெற்றதாக முன்னாள் பிரதமர் ரணில் தலைமையிலான நல்லாட்சி அரசாங்கத்தினர் 2015 ஆம் ஆண்டு காலம் தொடக்கம் குற்றச்சாட்டுக்களை மாத்திரம் முன்வைத்தார்கள்.

கடந்த அரசாங்கத்தில் பிணைமுறி மோசடி இடம்பெற்றதாக 2015 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கம் ஆதாரபூர்வமாக எதையும் நிரூபிக்கவில்லை.

எமது ஆட்சியில் பிணைமுறி கொடுக்கல்-வாங்கலில் மோசடி இடம்பெறவில்லை என்பதை மத்திய வங்கியில் ஆளுநர் பதவி வகித்த என்னால் ஆதாரபூர்வமாக குறிப்பிட முடியும்.

இவ்விடயத்தை ஏற்கனவே ஊடக சந்திப்பின் ஊடாக தெளிவுபடுத்தியுள்ளேன். வெளிப்படுத்திய எமது தரப்பு ஆதாரங்கள் தொடர்பில் கடந்த அரசாங்கம் எவ்விதமான கருத்தினையும் இதுவரையில் தெரிவிக்கவில்லை.

மத்திய வங்கியில் பிணைமுறி மோசடி குறித்து 2015 ஆம் ஆண்டில் இருந்து முன்னெடுக்கப்படும் விசாரணை நடவடிக்கைகள் பயனற்றவை என்றே குறிப்பிட வேண்டும்.

இதுவரையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணை அறிக்கைகளில் மோசடியுடன் தொடர்புடையவர்கள் யார் என்பது தொடர்பில் குறிப்பிடப்பட்டிருப்பினும் அடுத்தகட்ட சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றன.

மோசடியுடன் தொடர்புடையவர்களை சட்டத்தின் முன் நிறுத்தும் விதத்தில் விசாரணைகள் அமையவில்லை. மாறாக காலத்தை வீணடிக்கும் விதமாகவே விசாரணை நடவடிக்கைகள் காணப்படுகின்றன.

எமது நிர்வாகத்தில் பிணைமுறி மோசடி இடம்பெற்றதாக குறிப்பிடப்படும் குற்றச்சாட்டுக்களுக்கு விரைவில் தக்க பதிலடியை வழங்குவேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# யாழ்.,கிளிநொச்சி மாவட்டங்களில் மூவாயிரம் கொங்கிறீட் வீடுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் மூவாயிரம் கொங்கிறீட் வீடுகளை அமைக்கக் கலந்துரையாடல் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

வடமாகாணத்தில் தேசிய நல்லிணக்க அமைச்சால் நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் குறித்த வீட்டுத்திட்டத்தின் முதற்கட்டமாக வவுனியா, மன்னார் மாவட்டங்களுக்கான கலந்துரையாடல் அண்மையில் இடம்பெற்றது.



இந்நிலையில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கான தலா 12 இலட்சம் ரூபாய் பெறுமதியான கொங்கிறீட் வீடுகளை அமைக்க முன்னாயத்தக்கலந்துரையாடல் விரைவில் இடம்பெறவுள்ளதாக தெரிய வருகிறது. (இ-10)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## விருந்து

பந்திக்கு முந்துகிற ஆசாமிகள் நம்மிடம் பலபேர் உண்டு. அப்படி முந்துகிறது கூட தப்பில்லை. ஆனால் அப்படி ஒரு விருந்திலே முதல் ஆளா உட்கார்ந்து சாப்பிட்டால்கூட வெளியிலே வருகிற போது என்ன பெரிய விருந்து வைத்து விட்டான்! சாம்பாறிலே உப்பு இல்லை. ரசத்திலே காரம் இல்லை என்று குறை கூறிக் கொண்டே வருகிறவர்களைப் பாருங்கள். அது சரியில்லை, நாகரிகமும் இல்லை. கல்யாணப் பத்திரிகையிலே என்ன போட்டிருக்கிறது... குடும்பத்தோட வந்து விருந்து சாப்பிட்டு... சாப்பாடு எப்படியிருக்கிறது? என்று அபிப்பிராயம் சொல்லிவிட்டுப் போங்கள் என்றா போட்டிருக்கிறது.

ஒருவர் வீட்டு விஷேசத்துக்குப் போயிருக்கிறோம் என்றால் எவ்வளவு அசௌகரியங்கள் நமக்கு ஏற்படலாம். ஏராளமான கூட்டம் வந்திருக்கும். எல்லோரையும் அவர்கள் வந்து தனித்தனியாக கவனித்துக் கொண்டிருக்க முடியாது. நாமதான் சமாளித்துக் கொண்டு வாழ்த்த வேண்டியவர்களை வாழ்த்தி விட்டு வந்து சேர வேண்டும். அதை விட்டுவிட்டு பத்திரிகை கொடுத்தானே என்று போனேன் சேர்...கவனிப்பே சரியில்லை என்று புலம்பிக் கொண்டிருக்கக் கூடாது.

ஒரு விருந்துக்குப் போனால் அங்கே எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி அனுபவசாலிகள் சில விபரங்களைச் சொல்லி வைத்திருக்கிறார்கள். இந்தக் காலத்திலே கல்யாணம், பிறந்தநாள் அதுஇது என்று நிறைய விருந்துகள் நடக்கிறது. அதெல்லாம் எதுக்காக? மனித உறவுகளை வளர்க்கிறதுக்காகத்தான் வேற எதுக்கு?

ஒரு விருந்துக்குப் போனால் அமைதியாக, பொறுமையாக போய் உட்கார வேண்டும். அடித்துப் பிடித்து முதல் இடத்தைப் பிடிக்கப் போகிறேன் என்று நிற்கக்கூடாது. முதல் பந்தி நடந்து கொண்டிருந்தால் அது முடிந்து இலையை எடுத்துச் சுத்தம் செய்ததற்கு பிறகு போய் உட்காருவதுதான் நாகரிகம்.

இலை எடுக்கிறதுக்கு முன்னர் அங்கே போய் உட்கார்ந்தால் நல்லா இருக்காது! சாப்பிட்டு விட்டு உட்கார்ந்திருக்கிறீர்களா? சாப்பிடுவதற்கு உட்கார்ந்திருக்கிறீர்களா? என்று பார்க்கிறவர்களுக்குச் சந்தேகம் வந்துவிடும். அதேமாதிரி இலையிலே எல்லாக் கறி வகைகளையும் பரிமாறினதுக்கு பின்பு சாப்பிட ஆரம்பிக்க வேண்டும். ஒவ்வொரு கறியாக வைக்க நாம் எடுத்து சாப்பிட்டுக் கொண்டிருந்தோமே என்றால் எதை வைத்தோம், எதை வைக்கவில்லை என்று பரிமாறினவரே குழம்பிப் போய்விடுவார். ஏனென்றால் எப்ப பார்த்தாலும் இலை காலியாகவே இருக்கும்.

சாப்பிடுகிறபோது உங்கள் சாப்பாட்டையே நீங்கள் கவனியுங்கள். அடுத்தவர்களுடைய இலையிலே என்ன இருக்கிறது...? பக்கத்திலே இருக்கிறவர் எதை அதிகமாகச் சாப்பிடுகிறார்...? இதெல்லாம் நமக்கு என்னத்துக்கு சேர்...!

எல்லோரும் சாப்பிட்டுவிட்டு முடிக்கிற வரைக்கும் பொறுமையாக இருக்கிறதுதான் நல்லது. நீங்கள் மட்டும் திடீரென்று பாதியில் எழுந்திருந்தால் பக்கத்திலே இருக்கிறவர்களுக்கு சங்கடமாக இருக்கும். பக்கத்திலே உள்ளவர்கள் உங்களை எழுந்து போகச் சொன்னால் எழுந்து போங்கள்.

விருந்துகளிலே சாப்பாட்டை வீணாக்கிறதே ஒரு நாகரிகமாகப் போய் விட்டது. இந்தக் காலத்திலே சாப்பாட்டுக்கே கஷ்டப்பட்டு பல பேரு இந்த உலகத்திலே இருக்கிறபோது... சாப்பாட்டை வீணாக்கிறது எவ்வளவு பெரிய மோசம் என்கிறதை நினைத்துப் பார்க்க வேண்டும். வேணுமான அளவுக்கு கேட்டு வாங்கிச் சாப்பிடுவதுதான் முறை.

விருந்திலே Self Sevice என்று ஒரு முறை சொல்கிறார்களல்லவா. அதாவது உணவு வகைகளெல்லாம் பொதுவாக ஒரு இடத்திலேயே வைத்து விடுவார்கள். நமக்கு வேண்டியதை நாம ஒரு தட்டிலே எடுத்துப் போட்டுக்கொண்டு சாப்பிட வேண்டியது. இதிலே கூட சில பேர் தேவைக்கு அதிகமாக எடுத்துப் போட்டுக் கொண்டு வீணாக்கி விடுகிறார்கள் சேர். இந்தக் கொடுமையை எங்கே போய்ச் சொல்வது.

சில சமயம் கடைசியாகச் சாப்பிடப் போகிறவர்களுக்கு எல்லா உணவும் கிடைக்காமல் போகலாம். அதைப் போய் பெரிதுபடுத்திக் கொண்டிருக்கக் கூடாது.

என்ன சேர் இந்த அளவுக்கு கூடவா நாகரிகம் தெரியாமல் இருக்கிறோம். இதைப் போய் பெரிதாகச் சொல்ல வந்து விட்டீர்களே என்று நீங்கள் நினைக்கலாம். ஒருவர் இரண்டு பேருக்கு இந்த விபரம் தேவைப்படலாம். அவர்கள் காதிலேயும் விழட்டும் என்பதற்காகத்தான் இது.

ஒரு பெரிய கல்யாண விருந்து நடந்து கொண்டிருந்தது. விருந்து மண்டபத்து வாசலிலே ஒருவர் நின்று கொண்டு வருகிறவர்களையெல்லாம் ரொம்ப மரியாதையாக வணங்கி உள்ளே அனுப்பிக் கொண்டிருந்தார். எப்படித் தெரியுமா? வருகிறவர்கள் கையைப்பிடித்து முத்தம் கொடுத்து அதன் பின்பு உள்ளே அனுப்பிக் கொண்டிருந்தார்.

கூட்டம் எல்லாம் முடிந்த பிறகு அவரிடம் போனேன். சேர் நானும் எவ்வளவோ விருந்துகளுக்குப் போயிருக்கிறேன். இருந்தாலும் எவ்வளவு மரியாதையாக வருகிறவர்கள் கைக்கு முத்தம் கொடுத்து வரவேற்கிறதை இங்கேதான் பார்க்கிறேன் என்றேன். அதுக்கு அவர், அட போங்க சேர் நான் முத்தம் கொடுக்கவில்லை. முதல் பந்தியிலே வந்து சாப்பிட்டவர்களே அடுத்த பந்திக்கு வருகிறார்களா என்று அவதானிக்கத்தான் பார்த்துக் கொண்டிருந்தேன் என்றார்.

# 1000 ரூபாய் நாள் சம்பளம்

# பொறிமுறையை செயற்படுத்தத் தெரியாமல் கோட்டாபய அரசாங்கம் திண்டாட்டம்

(கொழும்பு)

**பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக ஆயிரம் ரூபாய் கிடைப்பதற்கு வழிவகை செய்யப்படும் என ஜனாதிபதி உறுதியளித்த நிலையில் - அப்பொறி முறையை எவ்வாறு செயற்படுத்துவது என்பது தெரியாமல் கோட்டாபய தலைமையிலான அரசாங்கம் திண்டாடி வருகின்றது. தெளிவான கொள்கையோ, தூரநோக்கு சிந்தனையோ இந்த அரசாங்கத்திடம் துளியளவும் கிடையாது என்பதையே இது உறுதிப்படுத்துகின்றது என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் சுட்டிக்காட்டினார்.**



ஆயிரம் ரூபா தொடர்பில் மாறுபட்ட கருத்துகளை வெளியிட்டு காலத்தை இழுத்தடித்து. தொழிலாளர்களை ஏமாற்றாமல் திட்டத்தை அமுல்படுத்துவதற்கான தெளிவான பொறிமுறை என்னவென்பதை அரசாங்கம் அறிவிக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் வெளியிட்ட அறிக்கையில்.

"பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு 1500 ரூபாய் வருமானம் கிடைப்பது உறுதி செய்யப்படும் என ஜனாதிபதித் தேர்தலின்போது நாம் அறிவித்திருந்தோம். அதற்கான பொறிமுறை என்னவென்றும் தெளிவாக எடுத்துரைத்தோம்.

எதிரணியில் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கிய தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப்படும் என்ற உறுதிமொழியை வழங்கியிருந்தார்.

இதன்படி எதிர்வரும் மார்ச் மாதம் முதல் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச வேதனமாக ஆயிரம் ரூபாய் கிடைப்பது உறுதி செய்யப்பட வேண்டும் என்ற கட்டளையை ஜனாதிபதி பிறப்பித்திருந்தார். ஆனால் அது எவ்வாறு சாத்தியப்படும் என்பது பற்றி அவர் உரிய தெளிவுபடுத்தல்களை முன்வைக்கவில்லை.

இருந்தும் அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா கிடைத்து விட்டது என்பதுபோல் ஆளும் கட்சியில் ஒட்டிக் கொண்டிருக்கும் தமிழ் அரசியல்வாதிகள் பிரமாண்ட அறிவிப்புகளை விடுத்ததுடன், இதோ மலையகத்தின் மீட்பர் வந்து விட்டார் என்றெல்லாம் துதிபாடினர்.

எனினும், தோட்டத் தொழிலாளர்களுக்கு எவ்வாறு சம்பள உயர்வை வழங்குவது எனத் தெரியாமல் அரசாங்கம் தடுமாறுகின்றது.

மறுபுறத்தில் கம்பனிகளும் கைவிரிக்கும் போக்கிலேயே கருத்துரைத்து வருகின்றன.

கம்பனிகளுக்கு வரிச்சலுகை மற்றும் நிவாரணங்களை வழங்குவதன் ஊடாக ஆயிரம் ரூபா இலக்கை எட்டலாம் என ஆரம்பத்தில் கூறிய பெருந்தோட்டத் துறை அமைச்சர் ரமேஷ் பத்திரன, ஆயிரத்துக்கு மேல் வருமானம் பெறுவது பற்றிய வழிமுறையை ஆராய வேண்டும் தற்போது அறிவிப்பு விடுக்கின்றார்.

அதுமட்டுமல்ல தேயிலை சபை இருக்கின்றது. இதன்மூலம் ஆயிரத்துக்கான ஏற்பாடு நடைபெறும் என வீராப்பு பேசிய இராஜாங்க அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே, ஆயிரம் ரூபாய் வழங்குவதை தடுக்க எதிர்க்கட்சிகள் சதி செய்வதாக தற்போது பொறுப்பற்ற விதத்தில் கருத்து வெளியிட்டு வருகின்றார். ஆயிரத்துக்கு பின்னால் சர்வதேச சதி இருக்கின்றது என்று மட்டும் தான் இன்னும் கூறவில்லை. அந்த அறிவிப்புகூட இன்று நாளை வெளிவரலாம்.

அதேவேளை, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபாய் கிடைப்பதற்கு நாம் எதிர்ப்பு வெளியிடவில்லை. அதற்கான தெளிவான வேலைத் திட்டத்தை அரசாங்கம் முன்வைத்தால் முழுமையான ஆதரவை வழங்குவோம். கம்பனிகளுக்கும் உரிய அழுத்தங்களை பிரயோகிப்போம்.

ஆனால், ஆயிரம் ரூபாவை வைத்து அரசியல் பிழைப்பு நடத்துவதே இந்த அரசாங்கத்தின் கபடநோக்கமாக இருக்கின்றது. அடுத்த கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் வரை இத்தொகையை எவ்வாறு வழங்குவது என்பது பற்றிய தெளிவான கொள்கையும் இல்லை.எனவே தான், இவ் விடயத்தில் அரசாங்கத்தின் உறுதியான நிலைப்பாடு என்னவென்பதை அறிவிக்குமாறு வலியுறுத்துகின்றோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)





**இந்தியாவின் குடியரசு தினம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் கொண்டாடப்பட்டது. இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் தரண்ஜித் சிங் சந்து தலைமையில் குடியரசு தின கொண்டாட்டங்கள் இடம்பெற்றன.**

# இ.போ.ச.பேருந்துகளில் கஞ்சாப் பொதிகள்!

## பயணிகள் நடுத்தெருவில் அந்தரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்லும் இ.போ.ச.பேருந்துகளில் அகப்படும் கஞ்சாப் பொதிகளால் நீண்ட தூரம் செல்லும் பயணிகளைப் பாதுகாப்புத் தரப்பினர் நடுவீதியில் இறக்கிவிடும் அவல நிலை நீடிக்கின்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு, கண்டி உள்ளிட்ட தூர இடங்களுக்குப் பயணம் மேற்கொண்ட இ.போ.ச.பேருந்துகளை கடந்த இரு நாட்களாக பூநகரி மற்றும் புளியங்குளம் பகுதிகளில் இடைமறித்த பாதுகாப்புப் படையினர் சோதனையிட்டபோது சுமார் இரண்டு கிலோ கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டன.இந் நிலையில் பூநகரியால் கொழும்பு நோக்கிச் சென்ற பேருந்தை செல்ல அனுமதித்த போதும் புளியங்குளம் பகுதியில் மறிக்கப்பட்ட பேருந்தை பயணிகளை வீதியில் இறக்கிவிட்டுப் பொலிஸ் நிலையம் செல்லுமாறு அனுப்பினர்.

இதனால் கண்டி நோக்கி பயணித்தவர்கள் இடைநடுவில் வேறு பேருந்துகளில் பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இது தொடர்பில் இ.போ.ச. பேருந்து நடத்துநர் ஒருவரிடம் வினவியபோது; பொதுமக்கள் கொண்டுவரும் பொதிகளைச் சோதனை செய்வதற்கு தமக்கு அதிகாரம் இல்லையெனக் கூறியதுடன் ஒரு சிலரின் தவறான செயற்பாடுகளால் ஏனைய பயணிகளை இடை நடுவில் அந்தரிக்கவிட முடியாதெனத் தெரிவித்தார்.

எனவே இவ் விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகள் தலையிட்டு பயணிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு விரைவாக தீர்வுகாண வேண்டும் எனப்பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.(இ-10)








யாழ்.தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவனும், சட்டத்தரணியுமான ராஜரட்ணம் செல்வாஸ் காந்தன் தனது தாயாரின் ஞாபகார்த்தமாக சொந்த நிதியில் வடமாகாணம் தழுவிய ரீதியில் மாணவர்கள் மத்தியில் 2019 ஆம் ஆண்டில் நடத்திய விஞ்ஞானம், கணிதபாட போட்டிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கலந்து கொண்டார். (படங்கள்:-குப்பிழான் செய்தியாளர்)



## மொட்டே எமக்கு அதிர்ஷ்டமான சின்னம்

# அடுத்தவாரம் ஆதரவு வேட்டை ஆரம்பம்

## பசிலுக்கு காத்திருக்கும் பெரமுன

(கொழும்பு)

பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ அடுத்தமாதம் நாடு திரும்பியவுடன் பொதுத்தேர்தலை வெற்றி கொள்வதற்கான திட்டமிடல்கள் அனைத்தும் முழுமையாகச் செயற்படுத்தப்படும் எனவும் பங்காளிக் கட்சிகளுடன் இணைந்து பொதுத் தேர்தலில் போட்டியிடும் போது எழும் சட்டப்பிரச்சினைகள் தொடர்பில் மாத்திரமே ஆராய்கின்றோம் எனவும் சக்தி வலு இராஜாங்க அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கு மொட்டுச்சின்னம் அதிர்ஷ்டமான சின்னம். அரசியல் அதிகாரத்தை இரண்டு பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மாத்திரமே தீர்மானிக்கும் என்ற பாரம்பரிய கருத்தை முழுமையாக மாற்றியமைத்துள்ளோம்.

இன்று இலங்கையின் அரசியல் தலைமைத்துவத்தை தீர்மானிக்கும் பிரதான கட்சியாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எழுச்சி பெற்றுள்ளது.



ஜனாதிபதித் தேர்தலில் அனைத்து அரசியல் கட்சிகளினதும், சிவில் அமைப்புக்களின் ஆதரவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கு கிடைக்கப் பெற்றது.

எந்நிலையிலும் அடிப்படைவாதிகள் மற்றும் மக்களினால் வெறுக்கப்பட்ட தரப்பினருடன் கூட்டணியமைக்கமாட்டோம் என்று மக்கள் மத்தியில் குறிப்பிட்டோம். அதற்கமையே இன்றும் செயற்படுகின்றோம்.

ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன என்ற கூட்டணியின் ஊடாகவே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டோம். ஜனாதிபதித் தேர்லில் பொதுச் சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்று குறிப்பிடப்பட்ட ஆலோசனை மறுக்கப்பட்டது.

மொட்டுச் சின்னத்திலே போட்டியிட வேண்டும் என்று பெரும்பான்மை உறுப்பினர்கள் குறிப்பிட்ட கருத்திற்கு மதிப்பளிக்கப்பட்டது.

கூட்டணியில் பெரும்பான்மை வகிக்கும் கட்சியின் உறுப்பினர்களுக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும். அதற்கமைய மொட்டுச் சின்னத்திற்கு முன்னுரிமை வழங்கப்படுவது அவசியமாகும். மக்களை மையப்படுத்திய தேர்தல் கொள்கையாக வெளியிடப்படும்.

பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடனான ஆதரவை பெற்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை ஸ்தாபிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பு ஊடகமொன்றுக்குவழங்கிய நேர்காணலில் அவர்.மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# கொழும்பு துறைமுகத்தில் பிலிப்பைன்ஸ் கப்பல்கள்



(கொழும்பு)

பிலிப்பைன்ஸ் கடற்படைக்கு சொந்தமான "ரமோன் அல்கராஸ்" மற்றும் "டவாவோ டெல் சூர்" என்ற இரு கப்பல்கள் நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தன.

மூன்று நாட்கள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த இந்தக் கப்பல்களை இலங்கைக் கடற்படையினர் சம்பிரதாய முறைப்படி வரவேற்றனர்.

அந்தக் கப்பல்களில் வருகை தந்த கடற்படைத்தளபதி கேர்ணல் நொயல் டி பெலரன், கடற்படை அதிகாரிகளான பிரான்ஸிஸ்கோ லூவிஸ் மற்றும் ஹோமர் டி கொன்சாலெஸ் ஆகியோர் மேற்கு கடற்படை கட்டளைத் தலைமையகத்துக்கு விஜயம் செய்தனர்.

இதன்போது மேற்கு கடற்படை கட்டளை தலைமையகத்தின் கடற்படை தளபதி ரியல் அட்மிரல் சுமித் வீரசிங்கவை சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது இரு தரப்பு முக்கியத்துவமுடைய பல விடயங்களில் கவனம் செலுத்தப்பட்டதோடு, நினைவுச் சின்னங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

இந்தக் கப்பல்கள் நாடு திரும்புவதற்கு முன்னர் அவற்றில் வருகை தந்திருப்பவர்கள் இலங்கைக் கடற்படையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட பல நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளவுள்ளனர். நாளை புதன்கிழமை இந்தக் கப்பல்கள் மீண்டும் பிலிப்பைன்ஸ் திரும்பவுள்ளன. (இ-7)

# எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் சரியான பிரதிநிதிகளை தெரிவு செய்வது மக்களின் பொறுப்பு-காவிந்த வலியுறுத்து

(கொழும்பு)

கட்சி வேறுபாடுகளின்றி அடுத்த பொதுத் தேர்தலில் சரியான பிரதிநிதிகளை நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுப்பது என்பது மக்களின் பொறுப்பு என ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்த்தன தெரிவித்தார்.

கம்பஹாவில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றுகையில், தற்போதைய அரசாங்கமும் 2015 இற்கு முன்னர் இருந்த அரசாங்கமும் கட்சியைப் பிளவுபடுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர் என்றும் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தேர்தல் அறிக்கையில் நாட்டுக்கும் மக்களுக்கும் நலன்தரும் விடயங்கள் இருந்தால் அவற்றிற்கு ஆதரவை வழங்க தாம் தயாராக இருப்பதாகவும் காவிந்த ஜயவர்த்தன தெரிவித்தார்.

மேலும் கட்சி வேறுபாடுகளை விடுத்து, திருடர்கள், கொள்ளையர்கள் இல்லாத பொதுப் பிரதிநிதிகளை தெரிவு செய்ய வேண்டும் என்றும் அவர் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்தார்.



இதன்மூலம் சிறந்த நாடாளுமன்றத்தை உருவாக்க முடியும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்த்தன மேலும் தெரிவித்தார். (ஐ)

# கொரோனா வைரஸால் தங்கத்தின் விலையில் மாற்றம்

(கொழும்பு)

உலகளாவிய ரீதியில் பெரும் அச்சுறுத்தலாக மாறி வரும் கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக தங்கத்தின் விலையில் பாரிய அதிகரிப்பு ஏற்படும் எனப் பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டினர்.

2003ஆம் ஆண்டு சார்ஸ் வைரஸ் பரவிய சந்தர்ப்பத்தில் இவ்வாறு தங்கத்தின் விலையில் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டது.

இது தொடர்பில் தீர்மானமிக்க கலந்துரையாடல் ஒன்று அமெரிக்க மத்திய கூட்டத்தில் இடம்பெறவுள்ளது.

அங்கு வரி அறவீடு மாற்றமடையாமல் பார்த்துக் கொள்வதற்கு தீர்மானிக்கப்படவுள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது.

பாதுகாப்பான முதலீடும் தங்கத்தின் விலை உயர்வுக்கு வழி வகுக்கும் எனக் குறிப்பிடப்படுகின்றது. உலக சந்தையில் கடந்த வார இறுதியில் தங்கத்தின் விலை அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



யாழ்.அல்வாய் அம்பாள் வித்தியாலய புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று அதிபர். கு.யோகேஸ்வரன் தலைமையில் இடம் பெற்றது. இதில் விருந்தினர்களாக வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன்,வட மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், வலயக் கல்விப் பணிப்பாளர் யோ. ரவீந்திரன், பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை ஸ்ரீ, கரவெட்டி பிரதேச சபைத் தவிசாளர் த.ஐங்கரன், ஓய்வுபெற்ற அதிபர் கி. நடராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

(படங்கள்:- மகாலிங்கம்)

# போராளிகள் மதிக்கப்பட வேண்டியவர்கள் காட்டிக்கொடுக்கும் செயலில் கோடீஸ்வரன்

## கருணா பகிரங்க குற்றச்சாட்டு

(அம்பாறை)

**பழைய போராளிகள் அனை வரையும் கருணா அம் மான் திரட்டுகிறார் என்று போராளி களைக் காட்டிக்கொடு க்கும் செயற் பாட்டில் பாராளுமன்ற உறுப் பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் ஈடுபட்டுள்ளதாக கருணா அம் மான் என அழைக்கப்படும் விநா யகமூர்த்தி முரளிதரன் குற்றஞ் சாட்டினார்.**



அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை, கோரக்கோவில், உதய புரம் பிரதேசத்தில் நேற்று முன் தினம் சமூக உத்தியோகத்தர் வெ. மோகன் தலைமையில் மக்கள் சந்திப்பு இடம்பெற்றது.

அவர் மேலும் தெரிவிக்கையில், முஸ்லிம் அரசியல்வாதிகள் கருணா அம்மான் என்றால் நட்பாகத் தான் இருக்கின்றார். சாதாரண மக்கள் நான் சண்டைக்கு வருவதாக நினைக்கின்றனர்.

அலிசாஹிர் மௌலானா என் உயிர் நண்பர். அரசியல் கொள்கை வேறு, நட்பு வேறு. இதுதான் நாகரிக அரசியல்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் தான் குரோத அரசியலை வளர்க்கின்றனர். கோடீஸ்வரன் அண்மையில் வெளியிட்ட அறிக்கை பாரதூரமான ஒரு அறிக்கை. பழைய போராளிகள் அனைவரையும் கருணா அம்மான் திரட்டுகிறார் என்றால் அது பாரதூரமான விடயம்.

அது காட்டிக்கொடுக்கும் அரசியல். அதற்கு நான் விடுவேனா படைத் தளபதியாக இருந்த நான் வெளியில் இருக்கும் போதும் போராளிகளை உள்ளே வைக்க நான் பார்த்துக் கொண்டிருக்க மாட்டேன். போராளிகளை கைது செய்து உள்ளே வைக்க வேண்டும் என்றால் என்னைத தானே முதலில் கைது செய்து உள்ளே வைக்க வேண்டும்.

நான் துணிந்து வெளியில் நிற்கின்றேன் என்றால் ஏனைய போராளிகளை உள்ளே வைக்க அனுமதிப்பேனா? அது ஒரு காலமும் போராளிகளை விட்டுக் கொடுக்க மாட்டேன் எனத் தெரிவித்தார்.

நான் சொல்வது என்னவென்றால் நமக்கு யதார்த்த ரீதியாக பொருந்தக்கூடிய அரசியலை செய்யக்கூடிய தலைமைகள் தான் எமக்கு வேண்டும். அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் பொத்துவில் தொடக்கம் பெரிய நீலாவணை வரை பல்வேறுபட்ட பிரச்சினைகள் இருக்கின்றன. இவற்றை நான் தீர்த்து வருகின்றேன்.

எமது மக்களுக்கு அபிவிருத்திகள், வேலை வாய்ப்புகள் பெற்றுக்கொடுக்க முடியும் என்றால் அது அரசியல் சாணக்கியத்தினால் மாத்திரமே முடியும். அது எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு செய்ய முடியாது. நாம் யுத்தம் வேண்டாம், வன்முறை வேண்டாம் என்று வந்திருக்கின்றோம். எமக்கிருக்கும் ஒரே பலம் அரசியல் பலம்.

நாம் சரியாக திட்டமிட்டு சரியாகச் செயற்படாவிட்டால் அரசியல்வாதிகளை வளர்த்துவிடுவோமே தவிர தமது பிரச்சினைகள் தீர்க்கக்கூடிய ஒருவரை தேர்ந்தெடுக்க முடியாது. அவ்வாறான அரசியல்வாதிகள் தங்களை வளர்த்துக் கொள்வார்கள். மக்கள் பிரச்சினையைக் கண்டுகொள்ள மாட்டார்கள்.

இன முரண்பாடு வேண்டாம் என்று தான் யுத்தத்தை கைவிட்டு அரசியல் பாதையில் பயணிக்கும் நான் இன குரோதங்களை வளர்ப்பவன் நானில்லை. ஆனால் ஒரு தேசிய இனத்தின் மக்களை நசுக்கும் செயற்பாடுகளில் யார் ஈடுபட்டாலும் அதை தடுத்து நிறுத்துவேன்.

ஒரு தனிப்பட்ட நபர்கள் காணி அபகரிப்பு, நில அபகரிப்பு போன்ற விடயங்களில் ஈடுபட்டால் அது ஒரு சமூகத்தின் செயற்பாடாக நாம் கருதக்கூடாது. அவருக்கான சட்ட நடவடிக்கைகள் மூலம் அவற்றை தடுத்து நிறுத்த வேண்டும்.

அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் காணிகளை கையகப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றார்.

முஸ்லிம்கள் சரியாக வாக்களித்து தலைவர்களை தேர்ந்தெடுக்கின்றனர். அவர்கள் ஆளும் அரசுடன் இணைந்து அபிவிருத்திகளை செய்கின்றனர். காரணம் அரசியல் பலம் தேசியம் தேசியம் என்று தேய்ந்து போய் விட்டோம். இப்போது இருக்கும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பிற்கு தேசியம் என்றால் என்னவென்றே தெரியாது.

அன்ரன் பாலசிங்கம் தலைமையில் தமிழ் மக்களுக்காக உலகம் முழுவதும் பேச்சுவார்த்தைக்கு சென்று உயிரோடு இருக்கும் ஒரே ஒரு நபர் நான் மாத்திரம் தான். இதில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அல்லது ஏனைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் கலந்து கொள்ளவில்லை. இவ்வாறு அவர்களுக்கு தேசியம் கதைக்கவும் அருகதை இல்லை.

பாராளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் எனக்கு எதிரான கருத்துக்களை முன்வைத்து வருகிறார். போராளிகளை ஒன்றிணைத்து போராட்டம் நடத்தப் போகிறார் என்றும் கூறுகின்றார். அவ்வாறு போராட்டம் நடத்துவதற்கு அவரையும் வந்து கலந்து கொள்ளுங்கள் என்று கேட்கிறோம்.

அவர் போராட்ட காலத்தில் ஓடி ஒழித்தவர். நாங்கள் போராளிகளை ஒன்று சேர்த்துள்ளதால் பயந்து போய் உள்ளார். போராளிகள் மதிக்கப்பட வேண்டியவர்கள்.

கல்முனை பிரதேச செயலகத்தை தரம் உயர்த்தி கொடுத்தால் நாங்கள் அனைவரும் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியுடன் இணைந்து நிற்போம் என்று கூறுகின்றனர். அம்பாறை மாவட்டத்தில் இருக்கும் தமிழ் மக்களுக்கு இது மாத்திரம் பிரச்சினை இல்லை.

இதுபோன்ற ஆயிரம் பிரச்சினைகள் உள்ளன. கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரம் உயர்த்தப்படும். இதில் முஸ்லிம்களுக்கு எந்தவித இழப்புகளும் இல்லை. கல்முனை என்று பார்க்காமல் அம்பாறை மாவட்டத்தின் அபிவிருத்தி என்ற ரீதியில் அவர்கள் பார்க்க வேண்டும்.

இதனைத் தொடர்ந்து முஸ்லிம்களால் அபகரிக்கப்படும் மயானக் காணியை பார்வையிட்ட கருணா அம்மான் சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளருடன் தொடர்புகொண்டு விரைவில் தீர்வைப் பெற்று தருவதாக வாக்குறுதி வழங்கினார். (ஐ)

## கொரோனா வைரஸ் தாக்கத்தின் எதிரொலி கட்டுநாயக்கவில் அம்புலன்ஸ்கள் தயார் நிலையில்

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் அம்புலன்ஸ் வண்டிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக விமான நிலைய சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றியுள்ளதாக சந்தேகிக்கப்படும் பயணிகளை உடனடியாக வைத்தியசாலைக்கு அனுப்பி வைப்பதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேலும் தற்போது விமான நிலைய வைத்திய அதிகாரிகள், விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் சுகாதார அமைச்சின் வைத்தியர் உள்ளடங்கிய குழுவொன்று விரைந்து செயற்பட்டுக் கொண்டிருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, சீனாவிலிருந்து வருகை தரும் பயணிகளை சோதனைக்கு உட்படுத்துவதற்காக விமான நிலையத்தில் விசேட மருத்துவ பிரிவு ஒன்றும் திறக்கப்பட்டுள்ளது.

அத்தோடு குறித்த பயணிகளை சோதனைக்கு உட்படுத்தும் போது விமான நிலைய ஊழியர்கள் பாதுகாப்பு முகமூடிகளை அணியுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)

## நாய் குறுக்கே பாய்ந்ததில் ஒருவர் பரிதாபமாகப் பலி



பத்தேகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தொடந்துவ - எத்கந்துர வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7.35 மணியளவில் குருசிங்ககொட பிரதேசத்திலிருந்து எத்கந்துர நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் வீதியில் குறுக்காக நாயொன்று ஓடியமையால் கட்டுப்பாடை இழந்து வீதியை விட்டு விலகியமையாலேயே குறித்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

மோட்டார் சைக்கிளில் சென்ற நபர் படுகாயமடைந்த நிலையில் காலி, கராபிட்டிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட தன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர் 57 வயதுடைய தொடந்துவ பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். பத்தேகம பொலிஸார் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## விமல் வீரவன்சவுக்கு எதிரான வழக்கு விசாரணைக்கு

சட்டவிரோதமான முறையில் வருமானங்களும் சொத்துக்களும் ஈட்டியுள்ளமைக்கு எதிராக அமைச்சர் விமல் வீரவன்சவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்க கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் ஹெட்டியாராச்சி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த வழக்கை பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

2010 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் 2014 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அமைச்சராக கடமையாற்றிய விமல் வீரவன்சவின் சட்டரீதியான வருமானத்தைத் தாண்டிய 75 மில்லியன் ரூபாவுக்கும் அதிக வருமானங்களும் சொத்துக்களும் சேகரிக்கப்பட்டதாகவும் அவை வருமானங்கள் மற்றும் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் தண்டனைக் குறிய குற்றம் எனவும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# காங்கேசன்துறை

# சீமெந்து தொழிற்சாலையை மீள ஆரம்பிக்க 300 ஏக்கர் மாற்று நிலங்கள் அடையாளம்

## கைத்தொழில் அமைச்சு தெரிவிப்பு

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பதற்கு சுமார் 300 ஏக்கர் மாற்று நிலங்கள் அடையாளம் காணப்பட்டு, அவை தொடர்பான சாத்திய அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது என கைத்தொழில், வணிக அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

"காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பதிலுள்ள இரண்டு பிரதான சிக்கல்கள் கண்டறியப்பட்டுள்ளன.

சுமார் 300 ஏக்கர் மாற்று நிலங்கள் அடையாளம் காணப்பட்டு, அவற்றின் சாத்திய அறிக்கை தயாரிக்கப்படுகிறது.

அத்துடன், காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பது தொடர்பில் யாழ்ப்பாணம் பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதியுடன் அமைச்சர் விமல் வீரவன்ச பேச்சு நடத்தினார்" என்று கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் செயலாளர் ஜே.ஏ.ரஞ்சித் தெரிவித்தார்.

இதேவேளை, வாழைச்சேனை கடதாசித் தொழிற்சாலை, ஒட்டுசுட்டான் ஓடு மற்றும் செங்கல் தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளையும் அமைச்சு முன்னெடுத்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)





அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடத்திய 59 ஆவது பட்டமளிப்பு விழாவும் சைவமாநாடும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் இடம்பெற்றது. இவ் விழாவில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இந்துக் கற்கைகள் பீட பீடாதிபதி கலாநிதி திருமதி சுகந்தினி சிறிமுரளிதரன், சிறப்பு விருந்தினராக பண்டிதர் தி.பொன்னம்பலவாணர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறைத் தலைவர் ச.முகுந்தன், கௌரவ விருந்தினராக கொடிகாமம் வர்த்தக சங்கத் தலைவர் சு.அருணாசலம் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:-செ.ரவிசாந்)

## சமலின் கீழ் குடிவரவு



(கொழும்பு)

குடிவரவு மற்றும் குடியகல்வு துறை பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டது. இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெளியிட்டார்.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் முன்னர் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இருந்தது.

இந் நிலையில், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷவின் கீழ் அந்தத் திணைக்களம் செயற்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


## இரத்ததானம்

(குப்பிழான்)

மானிப்பாய் ஹற்றன் நஷனல் வங்கியின் ஏற்பாட்டில் நாளை புதன்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை இரத்ததான முகாம் நடைபெறும். (இ-18)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1959

**தாருசா**



நீ எப்பிடியோ போகேக்க..
என்னை வீட்டில விட்டாப் போதும்

**மலர்**



ரொனிக்னா எனக்கு குடுங்க
ஊசின்னா இதுக்குப் போடுங்க...

**விதுஷன்**



என்கிட்ட இருந்து நீ
தப்பிக்கவே முடியாது...

**சுஜீவன்**




**தனம்**



தலையில மட்டும்
தண்ணி பட்டிடுச்சு...

**பாலு**

நேர்மையான குணம்
கொண்டவர்களுக்கு என்றுமே
இந்த உலகில் மதிப்பு இல்லை
தான் ஆனால் நிற்சயமாக உன்
நல்ல மனதுக்காக அந்த
இறைவனின் பரிசு
கட்டாயம் கிடைக்கும்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஜனாதிபதியும் பிரதமருமே முதல் மோசடிக்காரர்கள்

## ஐ.தே.கவின் அஜித் சாடல்

(கொழும்பு)

**இலங்கை மத்திய வங்கி பிணைமுறி மோசடி விவகாரங்களை மறந்து ரஞ்சன் ராம நாயக்கவின் தொலைபேசி உரை யாடல் குரல் பதிவுகளைக் கொண்டு ஆட்சி நடத்தும் ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுமே இன்று மோசடிக்காரர்களாகியுள்ளனர் என்று ஐ.தே.க.பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மன்னப் பெரும குற்றம் சாட்டினார்.**

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி மோசடிக்காரர்களுக்கு தண்டனை பெற்றுக் கொடுப்பதாகக் கூறியே ஜனாதிபதி கோட்டா தலைமையிலான அரசாங்கம் ஆட்சியைப் பொறுப்பேற்றது.

ஆனால் தற்போதே அவர்களே அதிலிருந்து பின்வாங்குகின்றனர்.

இதன்மூலம் ஜனா திபதியும் பிரதமரும் மோசடிக் காரர்களாகியுள்ளனர். தற்போது வங்கிகளில் பணமோசடிகள் இடம்பெறு வதில்லை.

மாறாக மரக்கறி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் விற்பனை மூலம் அதிகளவு பணம் கொள்ளையிடப்படுகிறது.

ரஞ்சன் ராமநாயக்கவின் தொலைபேசி உரையாடல் குரல் பதிவுகளைக் கொண்டே தற்போதைய அரசாங்கம் ஆட்சியை முன்னெடுத்துச் செல்கிறது. அவற்றியிலேயே அனைவரும் கவனம் செலுத்துகின்றனர்.

ஆனால் மகிந்தவுக்கும் கோட்டாவுக்கும் இடையிலுள்ள பிரச்சினைகள் தொடர்பில் யாரும் கேள்வியெழுப் புவதில்லை. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அக்ராசன உரையன்று பாராளுமன்ற சம்பிரதாயப்படி சபாநாயகரும் பிரதமரும் இணைந்தே அவரை வரவேற்றிருக்க



வேண்டும்.

அதுவே வழமையாக பின்பற்றப்படும் முறைமையாகும். ஆனால் இந்தமுறை அவ்வாறு பிரதமரால் ஜனாதிபதி வரவேற்கப்படவில்லை. இது குறித்து யாரும் கேள்வியெழுப்பவும் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



தேசிய சேமிப்பு வங்கி ஓய்வூதியர் சங்கத்தின் 25 வருட பூர்த்தியை முன்னிட்டு யாழ்.மாவட்ட கிளை சங்கத்தினரால் சமூக மேம்பாட்டு நலத்திட்டத்தின் கீழ் இரண்டு தையல் இயந்திரங்கள் கடந்த 20 ஆம் திகதி தேசிய சேமிப்பு வங்கி நெல்லியடிக் கிளையிலும் யாழ்ப்பாணக்கிளையிலும் வைத்து வழங்கப்பட்டன.

# கட்சியின் தலைமைப் பிரச்சினைக்கு இந்த வாரத்திற்குள் தீர்வு கிட்டும்

## ரவி கருணாநாயக்க நம்பிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவப் பிரச்சினைக்கு இந்த வாரத்திற்குள் தீர்வு கிட்டும் என அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பு மோதர பகுதியில் வைத்து நேற்று முன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், அரசியல் கட்சி என்ற ரீதியில் ஐ.தே.க. எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கு தயாராக இருப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

தற்போது நாட்டின் பொருளாதாரம் மிகவும் ஆபத்தான நிலையில் இருப்பதாகத் தெரிவித்த ரவி கருணாநாயக்க இது அண்மையில் இடம்பெற்ற விடயம் இல்லை என்றும் கூறினார்.

அதாவது நாட்டின் பொருளாதாரத்தை சக்திமிக்கதாக மற்ற முயற்சித்த போதும் அது வீழ்ச்சியடைந்ததாகவும் ரவி கருணாநாயக்க மேலும் தெரிவித தார். (இ-7)



# செய்தித்துளிகள்

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

(குப்பிழான்)

ஏழாலை தெற்கு வசந்தபுரம் களபாவோடை வசந்த நாக பூஷணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறவுள்ள இவ்வாலய மஹோற்சவத்தில் எதிர்வரும் 8 ஆம் திகதி முற்பகல் 11.10 மணியளவில் இரதோற்சவமும் மறுநாள் 9 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (இ-18)

## செயற்பட்டு மகிழ்வோம்

(யாழ்ப்பாணம்)

தோப்பு அருள்நந்தி வித்தியாலயத்தின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா நாளை 29 ஆம் திகதி புதன் கிழமை பிற்பகல் 1.45 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் மு.ராஜவரோதயம் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.வலய ஆரம்பக் கல்விப் பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் ப.சசிகுமார், சிறப்பு விருந்தினராக பழைய மாணவி(கனடா) திருமதி. நித்தியலஷ்மி பிறைகூடி ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

## திரையரங்குகளின் தரத்தை மேம்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

திரையரங்குகளின் தரத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் கலாநிதி ஜயந்த தர்மதாச தெரிவித்தார்.

ரசிகர்களை மீண்டும் ஈர்ப்பதே இதன் நோக்கமாகும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

## யாழ்.ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்

(குப்பிழான்)

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 9.30 மணி முதல் யாழ்.மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள இக் கூட்டத்தில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-18)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 90 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 300 | 260 | 400 |
| தக்காளி | 400 | 240 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 90 | 100 |
| கோவா | 150 | 120 | 160 |
| கரட் | 300 | 240 | 500 |
| பூசணி | 140 | 90 | 160 |
| புடோல் | 120 | 120 | 160 |
| வாழைக்காய் | 80 | 90 | 120 |
| சின்ன வெங்காயம் | 350 | 320 | 400 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 120 |
| பாகற்காய் | 140 | 150 | 200 |
| வெண்டிக்காய் | 200 | 90 | 160 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 100 |
| பயற்றங்காய் | 180 | 190 | 200 |
| லீக்ஸ் | 300 | 400 | 300 |
| பீற்றூட் | 150 | 230 | 160 |
| கறிமிளகாய் | 350 | 240 | 300 |
| முருங்கைக்காய் | 800 | 600 | 800 |
| போஞ்சி | 200 | 220 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 70 | 80 |
| கீரை - 1பிடி | 50 | 30 | 40 |
| தேசிக்காய் | 40 | 40 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 55 | 40-60 |
| இராசவள்ளி | 180 | 150 | 200 |
| வெங்காயப்பூ | 350 | 220 | 300 |
| முள்ளங்கி | 60 | 90 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 40 |
| வல்லாரை | 15 | 30 | 20 |
| ஈரப்பலா | 80 | 120 | 120 |




# எள்ளு போச்சு எண்ணெய் வந்தது



ஓர் ஊரில் உழவன் ஒருவன் இருந்தான். அவன் பெரிய மீசையுடன் பார்ப்பதற்குப் பயங்கரமாக இருந்தான். உழுவதற்காக அவன் வைத்திருந்த கலப்பை உடைந்து விட்டது.

புதிய கலப்பை செய்வதற்கு மரம் வெட்டுவதற்காகப் பக்கத்திலிருந்த காட்டுக்குள் நுழைந்தான் அவன்.

அங்கிருந்த பெரிய மரம் ஒன்றைத் தேர்ந்தெடுத்தான். "நல்ல வைரம் பாய்ந்த மரம். இதில் கலப்பை செய்தால் நீண்ட காலம் உழைக்கும்" என்று சொல்லிக் கொண்டே கோடரியால் அதை வெட்டத் தொடங்கினான்.

அந்த மரத்தில் நிறையப் பேய்கள் குடியிருந்தன. அந்த மரத்தை வெட்டுவதைக் கண்டு அவை பயந்து நடுங்கின.

மரத்தை விட்டுக் கீழே இறங்கிய எல்லாப் பேய்களும் அவன் காலில் விழுந்தன.

பேய்களைக் கண்ட அவனுக்கு அச்சத்தால் மூச்சே நின்று விடும் போல இருந்தது. என்ன நடக்கப் போகிறதோ என்று நடுங்கியபடியே இருந்தான்.

கிழப்பேய் ஒன்று, "ஐயா! இந்த மரத்தில் நாங்கள் பரம்பரையாக வாழ்ந்து வருகிறோம். எதற்காக இதை வெட்டுகிறீர்கள்? எங்களுக்கு வாழ்வு கொடுங்கள்" என்று கெஞ்சியது.

இதைக் கேட்டதும் அவனுக்குப் போன உயிர் திரும்பி வந்தது. தன் நடுக்கத்தை மறைத்துக் கொண்டான்.

பேய்களைப் பார்த்து அதிகாரக் குரலில், "நிலத்தில் எள் விதைக்க வேண்டும் புதிய கலப்பை செய்வதற்காக இந்த மரத்தை வெட்டுகிறேன். நீங்கள் என் காலில் விழுந்ததால் பிழைத்தீர்கள். இல்லையேல் உங்களை எல்லாம் ஒழித்து இருப்பேன். என் வீட்டுத் தோட்டத்தில் பத்துப் பேய்களைக் கட்டி வைத்து இருக்கிறேன்" என்று கதை அளந்தான் அவன்.

"ஐயா! மரத்தை வெட்டாதீர்கள். நாங்கள் வேறு எங்கே போவோம்? எங்கள் மீது இரக்கம் காட்டுங்கள்" என்று எல்லாப் பேய்களும் அவன் காலைப் பிடித்துக் கொண்டு அழுதன.

"கலப்பை இல்லாமல் நான் என்ன செய்வேன்? என்னிடம் இரக்கத்தை எதிர்பார்க்காதீர்கள். மரத்தை வெட்டியே தீருவேன்" என்றான் அவன்.

கிழப்பேய் அவனைப் பார்த்து, "ஐயா! உங்கள் நிலத்தில் ஓராண்டிற்கு எவ்வளவு எள் விளைகிறது?" என்று கேட்டது.

"ஐம்பது மூட்டை எள்?" என்றான் அவன்.

"ஆண்டிற்கு நூறு மூட்டை எள் நாங்கள் தருகிறோம். இந்த மரத்தை வெட்டாதீர்கள்" என்று கெஞ்சியது அது.

உங்கள் மீது இரக்கப்பட்டு இந்த மரத்தை வெட்டாமல் விடுகிறேன். ஒவ்வோர் ஆண்டும் அறுவடை நேரத்தில் நூறு மூட்டை எள் வந்தாக வேண்டும். வரத் தவறினால் இந்த மரத்தை வெட்டுவதோடு நிற்க மாட்டேன். உங்களையும் அழித்து விடுவேன்" என்றான் அவன்.

"எங்கள் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டதற்கு நன்றி. நாங்கள் சொன்ன சொல் தவற மாட்டோம்" என்றது அந்தப் பேய்.

மகிழ்ச்சியுடன் அவனும் வீடு வந்து சேர்ந்தான்.

அறுவடைக் காலம் வந்தது. பல இடங்களில் விளைந்த எள்ளைப் பேய்கள் திருடின. எப்படியோ நூறு மூட்டை எள்ளைச் சேர்த்து அவனிடம் கொண்டு வந்தன.

பேய்களைப் பார்த்து அவன், "சொன்னபடியே எள் கொண்டு வந்து இருக்கிறீர்கள். என்னை ஏமாற்ற முயன்றால் நான் பொல்லாதவனாகி விடுவேன். ஆண்டுதோறும் இப்படியே வர வேண்டும்" என்று மிரட்டி அவற்றை அனுப்பி வைத்தான்.

நடுங்கியபடியே பேய்கள் அங்கிருந்து சென்றன.

சில நாட்கள் கழிந்தன. புதுப்பேய் என்ற பெயருடைய பேய் தன் உறவினர்களைப் பார்க்க அங்கு வந்தது. எல்லாப் பேய்களும் இளைத்துத் துரும்பாக இருப்பதைக் கண்டது அது.

"சென்ற ஆண்டு உங்களைப் பார்த்தேன். மகிழ்ச்சியாக இருந்தீர்கள். இன்றோ மெலிந்து சோகத்துடன் காட்சி அளிக்கிறீர்கள். என்ன நடந்தது? சொல்லுங்கள்" என்று கேட்டது அது.

நடந்தது அனைத்தையும் சொன்னது ஒரு பேய்.

"நூறு மூட்டை எள்ளைத் தேடி அலைவதிலேயே எங்கள் காலம் கழிகிறது" என்று எல்லாப் பேய்களும் வருத்தத்துடன் சொல்லின.

புதுப்பேயால் சிரிப்பை அடக்க முடியவில்லை. "நீங்கள் இவ்வளவு முட்டாள்களா? நாம் பேய்கள் அல்லவா? நமக்குத்தான் மனிதர்கள் பயப்பட வேண்டும். நாம் அவர்களுக்குப் பயப்படலாமா?" என்று கேட்டது.

"அவன் சாதாரண மனிதன் அல்ல. எத்தனையோ பெரிய பேய்களை வீட்டில் கட்டி வைத்து இருக்கிறான். எதற்கும் அஞ்சாத முரடன். அதனால்தான் நூறு மூட்டை எள் தர ஒப்புக் கொண்டோம்" என்றது ஒரு பேய்.

"போயும் போயும் ஒரு மனிதனுக்கா அஞ்சுகிறீர்கள்? வெட்கம்! வெட்கம்! இன்றே அவனைக் கொன்றுவிட்டுத் திரும்புகிறேன்" என்று புறப்பட்டது புதுப்பேய்.

"வேண்டாம். நாங்கள் சொல்வதைக் கேள். நீ அவனிடம் மாட்டிக் கொண்டு துன்பப்படப் போகிறாய்" என்று எச்சரித்தன மற்ற பேய்கள்.

உழவனின் வீட்டிற்குச் சென்றது புதுப்பேய். வாய்ப்பை எதிர்பார்த்து மாட்டுத் தொழுவத்தில் பதுங்கி இருந்தது அது.

வெளியூரில் இருந்து வாங்கி வந்த பல மாடுகள் அங்கே கட்டப்பட்டு இருந்தன. புதுப்பேய் என்ற ஊரில் வாங்கிய மாடும் அவற்றுள் ஒன்று. அது முரட்டு மாடாக இருந்தது.

புதிய மாடுகளுக்கு அடையாளம் தெரிவதற்காக சூடு வைக்க நினைத்தான் அவன்.

தன் வேலைக்காரனைப் பார்த்து. "டேய்! அந்தப் புதுப் பேயை இழுத்து வந்து கட்டு. பழுக்கக் காய்ச்சிய இரும்புத் துண்டால் பெரிய சூடு போட வேண்டும். வெளியூர் என்பதால் நம்மைப் பற்றித் தெரியாமல் ஆட்டம் போடுகிறது. சூடு போட்டவுடன் அதுவும் இங்குள்ளவை போல ஆகிவிடும். ஒழுங்காகப் பணிந்து நடக்கும்" என்று உரத்த குரலில் கத்தினான் அவன்.

பதுங்கி இருந்த புதுப்பேய் இதை கேட்டு நடுங்கியது. "ஐயோ! எல்லாப் பேய்களும் தடுத்தனவே! என் ஆணவத்தால் அவற்றை மீறி வந்தேனே! பெரிய மீசையுடன் இருக்கும் இவனைப் பார்த்தாலே பயமாக இருக்கிறதே. சிறிதும் இரக்கம் இல்லாதவன் போலத் தோன்றுகிறான். நாம் நன்றாக மாட்டிக் கொண்டோம். தப்பிக்க வழியே இல்லை. நமக்குப் பெரிய சூடு போடத்தான் போகிறான். என்ன செய்வது?" என்று குழம்பியது அது.

மாட்டைக் கட்டுவதற்காக உழவன் பெரிய கயிற்றுடன் வந்தான்.

அவன் கால்களில் விழுந்த புதுப்பேய், "ஐயா! என்னை மன்னித்து விடுங்கள். தெரியாமல் நான் இங்கே வந்து விட்டேன். எனக்குச் சூடு போட்டு விடாதீர்கள்" என்று கெஞ்சியது.

தன் நடுக்கத்தை மறைத்துக் கொண்ட அவன், "என் எதிரில் வர உனக்கு என்ன துணிச்சல்? உன்னை என்ன செய்கிறேன் பார்?" என்று கோபத்துடன் கத்தினான்.

இவனிடமிருந்து எப்படித் தப்பிப்பது என்று சிந்தித்தது அது, "எல்லாப் பேய்களும் என்னை உங்களிடம் அனுப்பி வைத்தன" என்று பொய் சொன்னது.

"எதற்காக அனுப்பினார்கள்? உண்மையைச் சொல். இல்லையேல் உன்னைத் தொலைத்து விடுவேன்" என்று இடிக்குரலில் முழங்கினான் அவன்.

"பேய்கள் உங்களுக்கு ஆண்டுதோறும் நூறு மூட்டை எள் தருகின்றன. நீங்கள் அவற்றை எண்ணெய் ஆக்குவதற்காக ஏன் துன்பப்பட வேண்டும்?" எள்ளுக்குப் பதில் நூறு பீப்பாய் எண்ணெய் தருவதாக அவை முடிவு எடுத்தன.

உங்களுக்கு எள் வேண்டுமா? எண்ணெய் வேண்டுமா? இதைத் தெரிந்து வருவதற்காக என்னை அனுப்பி வைத்தன. உங்களுக்கு என்ன வேண்டும்? சொல்லுங்கள்" என்று நடுங்கியபடியே கேட்டது அது.

"இனிமேல் எனக்கு எள் வேண்டாம். எண்ணெயாகவே தாருங்கள். ஏதேனும் தவறு நடக்குமானால் உங்கள் அனைவரையும் தொலைத்து விடுவேன். ஓடு." என்று விரட்டினான் அவன்.

எப்படியோ தப்பித்தோம் என்று ஒரே ஓட்டமாக ஓடியது அது. மூச்சு வாங்கக் காட்டை அடைந்தது. அதன் நிலையைப் பார்த்த மற்ற பேய்களும் என்ன நடந்திருக்கும் என்பது புரிந்தது.

"என்ன புதுப்பேயே? வீரம் பேசிவிட்டுச் சென்றாயே? அவனைக் கொன்று விட்டாயா?" என்று கேலியாகக் கேட்டது ஒரு பேய். "உங்கள் பேச்சைக் கேட்காதது தப்புதான். முரடனான அவனிடம் நான் நன்றாகச் சிக்கிக் கொண்டேன். எனக்குப் பெரிய சூடு வைத்து இருப்பான். அதை இப்பொழுது நினைத்தாலும் என் உள்ளம் நடுங்குகிறது" என் அறிவு வேலை செய்தது. எப்படியோ அவனிடம் இருந்து தப்பி விட்டேன்? என்றது புதுப்பேய்.

"அவன் பெரிய ஆளாயிற்றே! அவனிடம் என்ன சொல்லித் தப்பினாய்?" என்று கேட்டது ஒரு கிழப் பேய்.

"நூறு மூட்டை எள்ளாகத் தருவதா? அல்லது நூறு பீப்பாய் எண்ணெயாகத் தருவதா? என்று கேட்டு வர நீங்கள் அனுப்பியதாகச் சொன்னேன்.

அவனும் இனிமேல் நூறு பீப்பாய் எண்ணெயே தருமாறு கட்டளை இட்டான்" என்று நடந்ததைச் சொன்னது புதுப்பேய்.


"என்ன காரியம் செய்துவிட்டாய். நூறு மூட்டை எள்ளைக் கொடுத்துவிட்டு நிம்மதியாக இருந்தோம். இனிமேல் நூறு பீப்பாய் எண்ணெய் தருவதாகச் சொல்லி விட்டு வந்திருக்கிறாய். அவ்வளவு எண்ணெயைச் சேர்ப்பதற்காக நாங்கள் தூக்கம் இல்லாமல் துன்பப்பட வேண்டும். நாங்கள் தடுத்தும் நீ கேட்கவில்லையே.

இனி என்ன செய்வது" என்று வருத்தத்துடன் புலம்பின அங்கிருந்த பேய்கள்.

எல்லாப் பேய்களும் தங்கள் தலைவிதியை நொந்து கொண்டன. ஆண்டுதோறும் உழவனுக்கு நூறு பீப்பாய் எண்ணெயைத் தந்து வந்தன.

"தன் அறிவுக்கூர்மை தன்னைக் காப்பாற்றியது. உழைக்காமலேயே வளமாக வாழும் வாய்ப்பும் வந்தது" என்று மகிழ்ந்தான் அவன்.

## கண்டுபிடி கண்ணே!



## பழமொழிகள்

- பதறாத காரியம் சிதறாது.
- பசி வந்தால் பத்தும் பறந்திடும்.
- பரணியிலே பிறந்தால் தரணி ஆளலாம்.
- பருத்திக்கு உழும் முன்னே தம்பிக்கு எட்டு முழம்.
- பலநாள் திருடன் ஒரு நாளைக்கு அகப்படுவான்.
- பல மரம் கண்ட தச்சன் ஒரு மரமும் வெட்டமாட்டான்.
- பல்லுப் போனால் சொல்லுப் போச்சு.
- பழகப் பழகப் பாலும் புளிக்கும்.
- பழி ஒரு பக்கம் பாவம் ஒரு பக்கம்.

கண் பார்வையை அனைவரும் விரும்புதல் போல அறிவு வளத்தையும் அனைவரும் விரும்புதல் இயற்கையாகும். - அரிஸ்டோட்டில்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கூட்டமைப்பிடம் இல்லாமல் போன குழவிக்கூட்டு மதிநுட்பம்

தமிழ் மொழியில் மதிநுட்பம் என்ற சொல் மிகப் பெறுமதியானது.

மதி என்பதற்கு அறிவு என்றொரு பொருள் உண்டு.

ஆக, நுட்பமான அறிவு என்பது அறிவை விட மேலானது என்பதால், மதிநுட்பம் என்ற சொற்பதத்தை நம்மவர்கள் மிகப்பெறுமதியான சொல்லாகப் பயன்படுத்தினர்.

மனிதர்களிடம் அறிவு என்பதை விட மதிநுட்பம் இருக்க வேண்டும் என்பதாலேயே அது சார்ந்த கதைகளை நம் முன்னோர்கள் ஆக்கித் தந்தனர்.

பாட்டி வடை சுட்ட கதை, கிணற்றுக்குள் சிங்கத்தின் நிழலைக் காட்டிய முயல் கதை, மரத்தில் பழுத்த பழங்கள் சிதறிக் கிடப்பதைக் கண்ட புத்திமான் எடுத்த முடிவு போன்ற கதைகள் எல்லாம் மதிநுட்பத்தின் ஆற்றலை விருத்தி செய்வதற்கானதாகும்.

மதிநுட்பம் என்பது மனிதர்களுக்கு மட்டும் உரியதென்று யாரும் எண்ணி விடக்கூடாது.

மாறாக, மனிதர்கள் வியக்குமளவுக்கு ஏனைய ஜீவராசிகளிடம் மதிநுட்பம் மிகுந்திருப்பதை நாம் காண முடியும்.

உதாரணமாக கருங்குழவிக்கூட்டில் ஏகப்பட்ட நுழைவாயில்கள் இருப்பதை நம் கண்ணால் பார்க்க முடியும். ஆனால் குழவிக் கூட்டுக்கு ஆபத்து நேருமாயின் அதில் இருந்து இராணிக்குழவியைக் காப்பாற்றிச் செல்வதற்காக அந்தக் கூட்டில் இரகசியப் பாதை ஒன்று இருக்கும். இதனை நாம் கண்டறிவது முடியாத காரியம்.

அந்தளவுக்கு மதிநுட்பத்துடன் அந்த இரகசியப் பாதை குழவிக்கூட்டில் அமைக்கப்பட்டிருக்கும். இது குழவிகளின் மதிநுட்பம்.

இங்கு குழவிகளிடம் இருக்கின்ற மதிநுட்பம் நம் தமிழ் அரசியல் தரப்புகளிடம் இல்லாமல் போனமைதான் வேதனைக்குரியது.

பொதுவில் மதிநுட்பம் கொண்ட அரசியல் தலைமையால் மட்டுமே தன் இனம் சார்ந்த மக்களைப் பாதுகாக்கவும் உரிமைகளைப் பெற்றுக் கொள்ளவும் முடியும்.

எனினும் எங்கள் தமிழினத்தைப் பொறுத்த வரை மதிநுட்பம் என்பது மருந்துக்கும் இல்லை என்றாகிவிட்டது.

இதை நாம் கூறும்போது சிலர் நம் மீது வெறுப்படையலாம்.

ஆனால் உள்ளதைச் சொல்வதன் மூலமே எங்களை நாம் சீராக்கம் செய்ய முடியும் என்ற அடிப்படையில் இதனைக் கூறித்தானாக வேண்டும்.

ஆம், ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவை கூட்டமைப்பு ஆதரிக்கும்போது, சிலவேளை கோட்டாபய ராஜபக்ஷ வெற்றிபெற்றால் அதனை எவ்வாறு கையாள்வது என்பது பற்றிய மதிநுட்பம் கூட்டமைப்பிடம் இருக்கவில்லை.

ஆனால் கூட்டமைப்பு ஆதரித்து நின்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குழவிக்கூட்டு மதிநுட்பத்தை மிகச் சிறப்பாக வகுத்திருந்தார்.

சஜித் பிரேமதாஸ தோற்றால், கோட்டாபய ராஜபக்ஷவை எவ்வாறு கையாள்வதென்பதற்கான ஏற்பாடுகளை ரணில் செய்திருந்தார்.

அதன் காரணமாக புதிய அரசாங்கமும் அவருக்குப் பலத்த பந்தோபஸ்து வழங்கியுள்ளது.

ஆனால் கூட்டமைப்பு வானம் பார்த்தது. இப்போது ஜனாதிபதியைச் சந்திக்கக்கூட முடியாமல் தவமிருக்கிறது.

என்ன செய்வது குழவிக்கூட்டு மதிநுட்பம் தெரியாவிட்டால் இதுதான் நிலைமை.

# கொரோனா வைரஸ் பரவலை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

### மக்கள் பீதியடைய வேண்டாம் - சுகாதார மேம்பாட்டுப் பணியகம்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவாமல் கட்டுப்படுத்த தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால், நாட்டு மக்கள் பீதி அடைய வேண்டாம் என்று சுகாதார மேம்பாட்டு பணியகம் கேட்டுக்கொண்டுள்ளது.

கொழும்பு வைத்தியசாலையில் சீன நாட்டுப் பெண் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியமை கண்டறியப்பட்டது.

இந்த அறிவிப்பை அடுத்தே சுகாதார அமைச்சின் சுகாதார மேம்பாட்டுப் பணியகம் மக்களிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

சீனாவிலிருந்து வருகை தந்த 43 வயதுடைய பெண்ணுக்கே கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்று திங்கட்கிழமை மாலை கண்டறியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## மக்கள் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் பங்குபற்றுதலுடன் நாளை புதன்கிழமை மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 4.00 மணி வரை பொதுமக்கள் தினம் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் உள்ள மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு சபையில் நடைபெறவுள்ளது. (ம-10)

## சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் பொலிஸாரால் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு கைது செய்யப்பட்டிருப்பதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இரவு 11மணியளவில் மறவன்புலவுப் பகுதியில் உள்ள வீடொன்றிற்குள் நுழைந்து வீட்டில் இருந்தவர்களைத் தாக்கியதுடன், வீட்டில் காணப்பட்ட ஒரு இலட்சத்து 72,000 ரூபாய் பெறுமதியான உடமைகளைச் சேதப்படுத்திய குற்றச்சாட்டில் சந்தேக நபரில் ஒருவரான பிரதேச சபை உறுப்பினர் கைது செய்யப்பட்டிருப்பதாக சாவகச்சேரி பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் மேலும் நால்வரை பொலிஸார் வலை வீசி வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

குறித்த கும்பலின் தாக்குதலுக்கு இலக்காகி வீட்டு உரிமையாளரின் மனைவி மற்றும் பிள்ளைகள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-30)

## தீவிரமடைந்த கொரோனா வைரஸ்

# சீனாவிலிருந்து 50 மாணவர்கள் நேற்று நாடு திரும்பினர்

(கொழும்பு)

சீனாவில் கல்வியைத் தொடர்ந்து வந்த ஐம்பது மாணவர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

சீனாவிற்கு சொந்தமான இரண்டு விமானங்களில் குறித்த மாணவர்கள் நேற்று மாலை இலங்கை வந்தடைந்துள்ளதாக விமான நிலைய சுகாதார பிரிவின் மருத்துவர் சன்திக்க பண்டார விக்ரமசூரிய தெரிவித்துள்ளார்.

சய்னா ஈஸ்டர்ன் விமான சேவைக்கு சொந்தமான இரண்டு விமானங்கள் நேற்று மாலை 5.54 மணிக்கும் 6.34 மணிக்கும் வந்து இறங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு நாடு திரும்பிய அனைத்து மாணவ, மாணவியரும் சிறந்த உடல் ஆரோக்கியத்துடன் இருப்பதாக மருத்துவர் சன்திக்க கொழும்பு ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சீனாவில் பரவியுள்ள கொரோனா வைரஸ் காரணமாக இதுவரையில் 80 பேர் வரையில் பலியாகியுள்ள நிலையில், 3000க்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம)

# புன்னாலைக்கட்டுவன் தெற்கில் வீதி விபத்து

### இருவர் படுகாயம்

(குப்பிளான்)

புன்னாலைக்கட்டுவன் தெற்குச் சந்திக்கு அருகில் பலாலி வீதியில் முச்சக்கர வண்டியும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்து தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்துச் சம்பவம் நேற்று மாலை 6 மணியளவில் இடம்பெற்றது.

மேற்படி விபத்துச் சம்பவத்தில் முச்சக்கர வண்டி தடம் புரண்டு கடுமையாகச் சேதமடைந்ததுடன் மோட்டார் சைக்கிளும் கடும் சேதங்களுக்குள்ளானது. (ம-18)

## ஒளிப்படங்களின் திருவிழா

# மேலும் இரு நாட்களுக்கு நீடிக்கப்பட்டதாக அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பழங்கால ஒளிப்படங்களின் திருவிழா கண்காட்சி மேலும் இரண்டு நாட்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியுடன் இணைந்த தந்தை செல்வா கலையரங்கில் கடந்த 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிய இந்தக் கண்காட்சியில் பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டு வருவதால் இன்று செவ்வாய்க்கிழமையும் நாளை புதன்கிழமையும் என இரண்டு நாட்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

எனவே பொதுமக்கள் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை பார்வையிடலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## தகுதியற்ற அரசியல் கட்சிகளை பதவியிலிருந்து நீக்குங்கள்-பவ்ரல்

(கொழும்பு)

புதிய அரசியல் கட்சிகளை பதிவு செய்யும் போது உரிய கவனம் எடுக்குமாறு தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ள பவ்ரல் அமைப்பு , தகுதியற்ற அரசியல் கட்சிகளை பதிவிலிருந்து நீக்குமாறும் கேட்டுக் கொண்டன.

அத்தோடு கட்சிகளை பதிவு செய்யும் போது கவனத்தில் கொள்ளுமாறு தெரிவித்து 7 கோரிக்கைகளையும் பவ்ரல் அமைப்பு முன்வைத்துள்ளது.

அரசியல் கட்சிகள் சில ஜன நாயகத்தை பாதுகாக்கின்றோம் என்ற பெயரில் ஜனநாயகத்தை துஷ் பிரயோகம் செய்கின்றனர். இச் செயற்பாட்டை இயன்றளவில் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஏற்கனவே பதிவு செய்யப் பட்ட அரசியல் கட்சிகள் உரிய அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை என்பதை கவனத்தில் கொண்டு இவ்வாறான அரசியல் கட்சிகளை பதிவுப் பட்டியலில் இருந்து நீக்க வேண்டும். மேற்கூறிய விடயங்கள் குறித்து உடன் கவனம் செலுத்துமாறும் பவ்ரல் அமைப்பு மேலும் கேட்டுக் கொண்டது.

பவ்ரல் அமைப்பின் தலைவர் ரோஹண ஹெட்டியாராச்சி சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவுக்கு மேற்குறித்த விடயம் தொடர்பில் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. (ஜ)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### உண்மையான ஆன்மீக முன்னேற்றம்



மனிதனுடைய ஆன்மா உலகப் பொருட்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு உள்ளார்ந்த பொருட்களில் கருத்தைச் செலுத்தி எப்பொழுது ஆராய முற்படுகிறதோ அதாவது உலகப் பொருளை ஆழ்ந்து சிந்திக்கச் சிந்திக்க நாளடைவில் அதுவே அதுவாக மாறிவிட்ட ஆன்மா அழிவை நோக்கித்தான் விரைந்து கொண்டிருப்பதை உணர்ந்து தன் உண்மை நிலை என்ன என்பதை அறிந்து தான் ஒரு வெறும் ஜடமாக மாறிவிட்டதையும் தெரிந்து இவ்வறிவால் உலகப் பொருட்களைக் காணும்போது முகத்தை எப்பொழுது திருப்பிக் கொள்கிறதோ அப்போது தியாகப் பண்பு தோன்றத் தொடங்குகிறது. உண்மையான ஆன்மீக முன்னேற்றம் உதயமாகிறது.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

முடிந்தால் சமாதானமாக இரு. ஆனால் என்ன நேர்ந்தாலும் உண்மையை மட்டும் கூறு.


-மார்ட்டின் லூதர் கிங்

# கூடைப்பந்து ஜாம்பவான் கோபி பிரயன்ட் ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழப்பு!

அமெரிக்க கூடைப்பந்து வரலாற்றின் தலைசிறந்த வீரரும், ஜாம்பவானுமான., கோப் பிரயன்ட், ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்தார்.

ஜாம்பவான் கோபி பிரயன்ட் தனது 13 வயது மகள் கியானாவுடன் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தனியார் ஹெலிகொப்டரில் பயணித்துக் கொண்டிருந்த போது. ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்துள்ளார்.

கூடைப்பந்துத் துறையில். மகத்தான வீரராக பார்க்கப்படும்



கோபி பிரயன்ட்டுக்கு தற்போது அனைத்துவகை விளையாட்டு பிரபலங்கள், நாட்டுத்தலைவர்கள், ரசிகர்கள் என அனைவரும் இரங்கல் வெளியிட்டு வருகின்றனர். பனிமூட்டமான வானிலையில் லொஸ்ஏஞ்சல்ஸ் நகரத்திலிருந்து வடமேற்கே 30 மைல் தொலைவில் உள்ள கலபாசாஸ் அருகே இந்த விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தின் போது. ஹெலிகொப்டரில் இருந்த கோபி பிரயன்ட் மற்றும் அவர் மகள் உட்பட 7 பேர் உயிரிழந்தனர்.

41 வயதான கோபி பீன் பிரயன்ட் (Kobe Bean Bryant). என்.பி.ஏ.இல் லொஸ்ஏஞ்சல்ஸ் லேகர்ஸ் என்ற அணியில் 20 ஆண்டு காலங்கள் விளையாடினார்.

பாடசாலை படிப்பை முடித்துக் கொண்டு நேரடியாக என்.பி.ஏ. சங்கத்தில் இணைந்தார். ஐந்து முறை என்பிஏ வாகையாளராகத் தெரிவு செய்யப்பட்டார். 18 முறை என்பிஏ அனைத்து நட்சத்திர வீரராகவும் தெரிவாகியமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## ஈஸ்வரன் அணி சம்பியன்




வவுனியா மாவட்ட உதைபந்தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் IOM நிறுவனத்தின் அனுசரணையில் நடத்தப்பட்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் அண்மையில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் வடதாரகை அணியை எதிர்த்து ஈஸ்வரன் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 01:00 என்ற கோல் கணக்கில் ஈஸ்வரன் அணி வெற்றி பெற்று சம்பியனானது.

ஈஸ்வரன் அணி சார்பாக மிதுர்சன் ஒரு கோலைப்பெற்று கொடுத்தார். இப் போட்டியின் ஆட்டநாயகனாக மிதுர்சன் தெரிவு செய்யப்பட்டார். (ஜ-2)

## பிடியைத்தவறவிட்ட ஹோலி கோபத்தில் சிரித்த பும்ரா

நியூசிலாந்து அணிக்கு எதிரான 2ஆவது இருபது-20 போட்டியில் இந்திய அணித்தலைவர் ஹோலி மிகவும் சுலபமாக கட்ஜை தவறவிட்டது ரசிகர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது.

ஆக்லாந்தில் நடந்த 2ஆவது இருபது-20 போட்டியில் இந்திய அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணியை வீழ்த்தி அபார வெற்றிபெற்றது. இதன் மூலம் 5 போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரை 2-0 என்ற வெற்றிக் கணக்கில் இந்தியா முன்னிலை பெற்றது.

முதல் இருபது-20 போட்டியிலும் கலக்கிய இந்திய வீரர் கே.எல். ராகுல் 2ஆவது இருபது-20 போட்டியிலும் இறுதிவரை ஆட்டமிழக்காமல் 57 ஓட்டங்கள் குவித்தார்.

ஆனால், 2ஆவது இருபது-20 போட்டி இந்திய அணித்தலைவர் ஹோலிக்கு சிறப்பாக அமையவில்லை. நியூசிலாந்து இன்னிங்ஸின் போது சுலபமான கட்ஜை தவறவிட்ட ஹோலி. துடுப்பாட்டத்தில் 11 ஓட்டங்களில் நடையை கட்டினார்.


நியூசிலாந்து இன்னிங்ஸின் போது 18ஆவது ஓவரில் இந்திய நட்சத்திர வீரர் பும்ரா பந்து வீச, டெய்லர் பந்தை பறக்கவிட்டார். சுலபமாக வந்த பந்தை பிடிக்க ஆயுத்தமான ஹோலி, இறுதியில் கட்ஜை தவறவிட்டு அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கினார்.



ஹோலி கட்ஜை தவறவிட்டதை கண்டு மிகுந்த ஏமாற்றமடைந்த பும்ரா, கோபத்திலும் சிரிப்பை வெளிப்படுத்தினார். (ஜ)

## கிரிக்கெட்டில் இருந்து டோனி ஓய்வு பெறுவது இந்திய அணிக்குத் தான் பாரிய இழப்பாகும்

### கபில்தேவ் உருக்கம்






சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெற டோனி முடிவு செய்தால் அது இந்தியாவின் இழப்பு என்று முன்னாள் இந்திய கப்டன் கபில்தேவ் உருக்கமாகத் தெரிவித்தார்.

இந்திய கிரிக்கெட் வரலாற்றில் மிகச்சிறந்த வீரர்களில் ஒருவரான டோனி, இந்தியாவை வழிநடத்திய மிக வெற்றிகரமான கப்டன்களில் ஒருவராக கருதப்படுகிறார். ஐ.சி.சி ஒருநாள் உலகக் கோப்பை, இருபது- 20 உலகக் கோப்பை மற்றும் சம்பியன்ஸ் டிராபி ஆகிய மூன்று முக்கிய ஐ.சி.சி கோப்பைகளையும் வென்ற ஒரே கப்டன் என்கிற பெருமையைப் பெற்றவர்.

இவர் இறுதியாக 2019ஆம் ஆண்டு நியூசிலாந்து அணிக்கெதிராக நடைபெற்ற உலகக் கோப்பை போட்டிக்கு பின்னர் தொடர்ந்து ஓய்வில் இருந்து வருகிறமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## நியூசிலாந்திற்கு எதிரான போட்டியில் பந்து வீச்சு பிரமாதமாக இருந்தது

### ஜடேஜா,பும்ரா பற்றி ஹோலி பெருமிதம்


ஜடேஜா, பும்ராவின் பந்து வீச்சு பிரமாதமாக இருந்தது என்று இந்திய கப்டன் விராட் ஹோலி பாராட்டு தெரிவித்தார்.

நியூசிலாந்துக்கு எதிரான 2ஆவது 20 ஓவர் கிரிக்கெட் போட்டியிலும் இந்திய அணி எளிதில் வெற்றி பெற்றது.

வெற்றிக்குப் பிறகு இந்திய கப்டன் விராட் ஹோலி கூறுகையில், 'இன்னொரு சிறந்த செயற்பாடு இது. குறிப்பாக பந்து வீச்சு மிக அபாரமாக இருந்தது. பந்து வீச்சாளர்கள் வெகுவாக ஆதிக்கம் செலுத்தி எதிரணியை கட்டுப்படுத்தினர்.

இங்கு முதலில் பட் செய்யும் போது 160 ரன்கள் நல்ல ஸ்கோராக இருக்கும் என்று நினைத்தேன். இந்த மைதானத்தில் எந்த மாதிரி பீல்டர்களை நிறுத்த வேண்டும், நியூசிலாந்து பட்ஸ்மேன்களின் அணுமுறை எப்படி இருக்கிறது என்பதை புரிந்து செயற்பட்டோம்.

ஜடேஜா, பும்ராவின் பந்து வீச்சு பிரமாதமாக இருந்தது.



அடுத்தடுத்து தோல்வி காரணமாக நியூசிலாந்து அணி பலமாக எழுச்சி பெற முயற்சிக்கும். அதற்கு ஏற்ப தயாராக வேண்டும்' என்றார். (ஜ-2)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## எங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி...

நிலையத்தினை நேற்று பிற்பகல் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித் துள்ளார் தொடர்ந்து உரையாற் றுகையில் தமிழ் சமூகத்தை அழி வில் இருந்து மீட்க வேண்டிய பொறுப்பு எல்லோரிடமும் உள்ளது இந்த நூலகம் சமூகத்தின் வளர்ச் சிக்கு எவ்வளவு அவசியம் என் பதையுணர்ந்து இந்த சனசமூக நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

எங்களுடைய தமிழ்ச் சமூகம் போருக்குப்பின்னர் சிதைவுற்றிருக் கின்ற நிலையில் இருந்து மீண்டெழு வதற்கு எடுக்கின்ற பல விதமான முயற்சிகளை முன்னெடுக் கின்ற போது இந்த முயற்சியும் தேவை யான ஒரு முயற்சியாக இருக்கின்றது.

தமிழ் இனத்திற்கு எதிராக காலத்திற்கு காலம் அநீதிகள் இழைக் கப்பட்டன எங்களுக்கு எதிராக பல்வேறு குற்றங்கள் இழைக்கப் பட்டிருக்கின்றன. இதற்கெல்லாம் நீதி கிடைக்க வேண்டும்.

இன்னமும் நீதியை தேடுகின்ற சமூகமாக நாங்கள் இப்போதும் இருக்கின்றோம் அதிலும் கவன மாக அதைக் கைவிடாதவர்களாக இன்னமும் இருக்கின்றோம்

காலம் கடந்து செல்கின்றது எங் களுக்கு இழைக்கப்பட்ட அநீதி களுக்கு காலங்கடந்தாலும் நீதியை பெற்றே தீருவோம் எனத் தெரிவித் துள்ளார். (ம-100,312)

## நீதிமன்றில் சமுகமளிக்காததால்...

வடக்கு மாகாண சபையின் முன் னாள் உறுப்பினர்களான து.ரவி கரன், எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் மீது முல்லைத்தீவுப் பொலிஸார் வழக்குப் பதிவு செய்தி ருந்தனர்.

குறித்த வழக்கு நேற்று திங்கட் கிழமை முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. இதன்போது நீதிமன்றத் தில் ஆஜராகாதமையால் சிவாஜி லிங்கத்தைக் கைதுசெய்யுமாறு நீதிவான் பிடியாணை உத்தர வைப் பிறப்பித்தார்.

மேலும், இந்த வழக்கு விசா ரணை எதிர்வரும் மே மாதம் 18ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி நீதிமன்றத் தில் முன்னிலையாகுமாறு அறிவிக் கப்பட்டதைத் தொடர்ந்து நீதிமன் றுக்குச் சென்ற எம்.கே.சிவாஜி லிங்கம் பிணையில் விடுதலை யாகியிருந்தார்.

இவ்வாறாக இருவர் மீதான வழக்கு விசாரணை இடம்பெற்று வரும் நிலையில், எம்.கே.சிவாஜி லிங்கம் நேற்று நீதிமன்றத்துக்குச் சமூகமளிக்காத நிலையில் அவருக் குப் பிடியாணை பிறப்பித்து நீதிமன் றம் உத்தரவிட்டுள்ளது. (ம)

## வெளி மாவட்டங்களுக்கு யாழிலிருந்து கஞ்சா...

கொழும்பு சென்ற பேருந்தும் நேற்று இரவு கனகராயன் குளம் பகுதியில் இராணுவம் மற்றும் பொலிஸாரால் நிறுத்தப்பட்டு சோத னையிடப்பட்டது.

இந்த நிலையில் பருத்தித்துறை யில் இருந்து வந்த பேருந்தில் விடுமுறையில் சென்ற கடற்படை வீரர் ஒருவர் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார்

அதே போன்று யாழ்ப்பாணத் தில் இருந்து சென்ற பேருந்தில் சோதனையின் போது ஒரு தொகை கஞ்சாவுடன் ஒருவர் கைதுசெய் யப்பட்டுள்ளார்.

மேலதிக விசா ரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ள னர். (ம-9)

## ஐ.தே.கவினர் மகிந்தவை...

தெரிவித்தார்.

பொலன்னறுவையில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இந்தக் கருத்தினை வெளி யிட்டார்.

அவர் அங்கு மேலும் 'தெரி விக்கையில், கடந்த 4 அரை வரு டங்களில் என்ன நடந்தது என்று உங்கள் அனைவருக்கும் தெரி யும். மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்த காரணத்திற் காக இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாது போனது.

பௌத்த மதகுருமார்கள் கைது செய்யப்பட்டார்கள். அடிப்படைவாத கட்சிகளின் பேச்சுக்கு சோரம் போய், ஒட்டுமொத்த முஸ்லிம்களை யும் தீவிரவாதிகளாக பார்க்கும் நிலைமை ஏற்பட்டது.

மத்திய வங்கிப் பிணை முறி மோசடி இடம்பெற்றது. இப்படியான அனைவரும் தற்போது எதிர்க்கட் சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் மேடையில்தான் உள்ளார் கள். இவர்களால்தான் நாட்டின் தேசிய பாதுகாப்பே இல்லாது போனது.

ஆனால், தற்போதும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவைத்தான் ஐக் கிய தேசியக் கட்சியினர் விமர்சித் துக்கொண்டிருக்கிறார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு தோல் வியடைவோம் என்ற பயம் வந்து விட்டது. இதனால்தான் பொய்யான பிரசாரங்களை மேற்கொண்டு வருகிறார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## யார் ஆட்சிக்கு வந்தாலும் திருடர்...

எதிர்க்கட்சி தலைவர் அலுவல கத்தில் நேற்று நடைபெற்ற செய்தி யாளர் சந்திப்பிலேயே அவர் இவ் வாறு தெரிவித்தார். இதன் போது மேலும் கருத்துரைத்த அவர் பிர தான அரசியல் கட்சிகள் இரண்டி னதும் தலைவர்கள் நல்ல நண்பர் கள் ஆகவே இவர்கள் ஆட்சிக்கு வந் தால் திருடர்கள் கொள்ளையாளிகள் போன்றோருக்கு ஒரு போதும் தண்டனை வழங்கப்பட மாட்டாது என்றார். (ம)

## இலங்கைக்கு இந்தியா முழுமையாக ஒத்துழைக்...

இந்திய - இலங்கை நாடு களைப் பொறுத்தவரை தீவிர வாதமும், அடிப்படைவாதமும் இருநாட்டு மக்களுக்கும், அன்றாட வாழ்க்கை முறைக்கும் பெரும் அச்சுறுத்தலாக மாறியிருக்கின் றன.

எனவே அதனை முற்றாக ஒழிப்பதற்கு இலங்கைக்கு முழுமை யான ஒத்துழைப்பை வழங்கும் அதேவேளை, இருநாடுகளுக்கும் இடையில் புலனாய்வுத் தகவல் களைப் பரிமாறிக்கொள்வதற்கும் இந்தியா தயாராக இருப்பதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ் தானிகர் தரன்ஜித் சிங் சந்து தெரி வித்தார்.

இந்தியாவின் 71ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு நேற்று மாலை கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்வில், உரையாற்றுகையி லேயே அவர் இவ்வாறு குறிப் பிட்டார்.'

அங்கு அவர் மேலும் கூறியதா வது,

இலங்கை எனக்கும், இந்தியா விற்கும் மிகவும் விருப்பத்திற்குரிய நாடாகும். இருநாடுகளுக்கும் இடையில் பலவருடகால நெருங் கிய பிணைப்பு காணப்படுவதுடன், இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்களின் பின்னர் இந்நாட்டுடனான ஒரு மைப்பாட்டை வெளிக்காட்டும் வகையில் இலங்கைக்கு விஜயம் செய்த முதலாவது வெளிநாட்டுத் தலைவர் இந்தியப் பிரதமர் நரேந் திர மோடி ஊடாக இரு நாடுகளுக் கும் இடையிலான வலுவான நட்பு றவு புலனாகின்றது. அதுமாத் திரமன்றி பிரதமர் மோடி யின் வருகை கடந்த 5 வருட காலத்தில் இடம்பெற்ற 3 ஆவது விஜயமாக அமைந்திருந்தது.

அத்தோடு கடந்த நவம்பர் 16 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தனது முதலாவது வெளிநாட்டு விஜ யத்தை இந்தியாவிற்கு மேற் கொண்டதன் மூலம் நாம் கௌர விக்கப்பட்டோம். வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன வும் அவரது முதலாவது வெளி நாட்டு விஜயத்தை இந்தியாவிற்கே மேற்கொண்டார். அதேபோன்று இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் மற்றும் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவால் ஆகியோர் இலங்கைக்கு விஜயம் செய்தனர். மேலும் வெகு விரைவில் பிரதமர் மகிந்த ராஜ பக்ஷவை இந்தியாவில் வரவேற் பதற்கான ஆயத்தங்களும் செய்யப் படுகின்றன.

இலங்கை - இந்திய நாடுகளுக்கு இடையிலான நல்லுறவு பொறுத்த வரை 2019 மிகவும் முக்கியமான ஆண்டாகும். தற்போது இலங்கை யின் 9 மாகாணங்களிலும் செயற் படும் 1990 என்ற இலக்க "சுவசெரிய" அம்பியூலன்ஸ் சேவை இந்திய உதவியுடன் அறிமுகப்படுத்தப்பட டது. எயார் இந்தியாவின் துணை நிறுவனமான அலைன்ஸ் எயார் மூலம் யாழ்ப்பாணம் - சென்னை ஆகிய நகரங்களுக்கு இடையி லான விமானசேவை ஆரம்பிக்கப் பட்டது. இந்திய நிதியுதவியுடன் மாகோ தொடக்கம் மாந்தை வரை யிலான புகையிரதப்பாதை புனர மைக்கப்பட்டது. இலங்கையில் 63 ஆயிரம் வீடுகளை நிர்மாணிப் பதற்கான இந்திய உதவித்திட்ட மொன்று வழங்கப்பட்டதுடன், அதன்கீழ் கடந்த வருடம்வரை 47 ஆயிரம் குடும்பங்களுக்கு வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு கையளிக்கப் பட்டுள்ளன. அவற்றோடு யாழ்ப் பாண கலாசார நிலையம், ருஹுணு பல்கலைக்கழகக் கேட்போர்கூடம், டிக்கோயா வைத்தியசாலை உள் ளிட்ட மேலும் பல திட்டங்களும் இந்திய நிதியுதவியுடன் இலங்கை யில் மேற்கொள்ளப்பட்டிருக்கின் றன.

எமது இருநாடுகளுக்கும் இடை யிலான உறவு மக்களை மையப் படுத்தியதாக அமைந்திருப்பதுடன், இருநாடுகளும் வளர்ச்சி கண்டு வரும் பொருளாதாரத்தைக் கொண் டிருக்கின்றன. அந்தவகையில் இளைஞர்களை வலுவூட்டும் வகை யிலான திட்டங்களை அறிமுகப் படுத்துவது அவசியமாகும் என் றார். (ம)

## பெரும்பான்மை பெற்றால்...

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வின் தலைமை அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித் துப் பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் பேசிய அவர்,

ஜனாதிபதி மக்களின் நலன் கருதி பாராளுமன்றத்தை கலைத்து தனக்கான அரசாங்கத்தை ஸ்தாபிக் கும் அதிகாரம் அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் ஊடாக இல்லாதொழிக்கப்பட்டுள்ளது.

இந்நிலைமை மாற்றியமைக் கப்பட வேண்டும். மக்களுக்கு பல மான அரசாங்கத்தின் ஊடாக அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதற்காகவே மூன் றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவினை கோருகின்றோம்.

பெரும்பான்மை ஆதரவுடன் அரசாங்கம் ஆட்சியமைத்தால் மாத்திரமே பல நெருக்கடிகளுக்கு தீர்வு காண முடியும். அரசியல மைப்பின் 19 ஆவது திருத்தத்தி னால் ஏற்பட்ட அதிகார முரண் பாடுகளை முக்கியமாக குறிப்பிட வேண்டும். அத்துடன் நடைமுறை யில் உள்ள தேர்தல் முறைமை அனைத்து மோசடிகளுக்கும் நேரடி பங்கு வகிக்கின்றது.

பெரும்பான்மை ஆதரவுடன் பலமான அரசாங்கம் தோற்று விக்க முடியாவிடின் ஜனாதிபதித் தேர்தலின் வெற்றியும் மக்களின் எதிர்பார்ப்பும் பயனற்றதாகிவிடும்.

மூன்றில் இரண்டு பெரும் பான்மையுடனான பலமான அரசாங் கத்தை நிச்சயம் ஸ்தாபிப்போம் என்றார். (ம)

## முதலாவது...

தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார் என்று அந்தப் பணியகம் அறிவித் துள்ளது. (ம)


SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1117
சீட்டிழுப்பு திகதி 27.01.2020 பச்சை
L 09 11 18 50
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.92,857,112

சீட்டிழுப்பு இல: 865
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2020.01.27
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 51,794,130/-
அத கோடிபதி ADA KOTIPATHI
வெற்றி இலக்கங்கள்
27 29 53 76 J

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.:3293 திகதி: 2020.01.27
நீலம் திங்கட்கிழமை
மஹிந்த வசனா
விசேட இலக்கம் 3625
வெற்றி இலக்கங்கள்
14 21 29 54 J
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் 30,333,500/-

ராசி அதிர்ஷ்டம்
திகதி 27.01.2020 வெற்றி வாரம் 2751 வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள்
விருச்சிகம் 11 26 43 60
திங்கட் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,901,122
2020/01/28 ம் திகதி செவ்வாய்க் கிழமை சிகப்பு நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2020/01/27
சீட்டிழுப்பு இலக்கம் 1499
22 23 34 60 65 68 49

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 27-01-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2374
வெற்றி இலக்கங்கள்
G 44 53 62 67

மஹஜன சம்பத
திகதி 2020/01/27
சீட்டிழுப்பு இலக்கம் 4101
U 6 3 6 8 3 8

மெகா பவர்
திகதி 27/01/2020
சீட்டிழுப்பு இலக்கம் 490
வெற்றி இலக்கங்கள்
A 13 35 42 52 74

# எனக்கு ஏற்பட்ட நிலைமை கோட்டாவுக்கு ஏற்படக்கூடாது

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி



(கொழும்பு)

**ஜனாதிபதியாக தான் பதவி வகித்தபோது தனக்கு ஏற்பட்ட நிலைமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகவே அவருக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

பொலநறுவையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

"மகாவலி அபிவிருத்தி குறித்து இங்கு பலருக்குத் தெரியும். விவசாயத்தை ஊக்குவிக்கவே இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

பின்னர் மின்சார உற்பத்திற்காக இந்தத் திட்டம் பயன் படுத்தப்பட்டது. 30 வருடங்களில் செய்ய வேண்டிய இந்தத் திட்டம் 7 வருடங்களில் செய்து முடிக்கப்பட்டது.

இதேபோன்று நான்கு வருடங்களில் மேற்கொள்ள வேண்டிய மொரகாஹந்த திட்டத்தை நான் 3 வருடங்களில் செய்து முடித்தேன். எமது செயற்பாடுகளை வேகப்படுத்தும்போதுதான் அபிவிருத்தி களையும் வேகப்படுத்த முடியும்.

இவ்வாறான அபிவிருத்திகளுக்காக நாம் கோடிக்கணக்கான நிதியை செலவழித்துள்ளோம். எனினும் மக்கள் இதுதொடர்பாக எல்லாம் கதைப்பதில்லை.

மூளை சரியாக வேலை செய்யாதவர்கள்தான், என்னைப் பார்த்து என்ன செய்தீர்கள் என்று கேட்கிறார்கள். இதுகுறித்து நான் என்றும் கவலையடையப் போவதில்லை.

புத்தருக்கே கல்வீசிய இந்த உலகத்தில் எமக்கு இவ்வாறான விமர்சனங்கள் வருவது எல்லாம் பெரிய விடயமல்ல. இப்படியான சமூகத்தில்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இதனை மாற்றிய மைத்து புதிய அரசாங்கத்துடன் இணைந்து புதிய பயணத்தை மேற்கொள்ள வேண்டும்.

தனது அதிகாரங்களை தானே குறைத்த ஜனாதிபதியாக நான் தான் காணப்படுகிறேன். உலகில் எவரேனும் இப்படியான செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளாரா? இல்லை.

எமது நாட்டின் 19 திருத்தச்சட்டங்களில் 12 திருத்தச்சட்டங்கள் ஜனாதிபதிக்கான அதிகாரத்தை அதிகரிக்கும் வகையில்தான் கொண்டுவரப்பட்டன.

இதனை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். புதிய ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள ஜனாதிபதிக்கு பாராளுமன்றில் பெரும்பான்மை கிடையாது. இதனால், அவருக்கு எந்தவொரு செயற்பாடும் மேற்கொள்ள முடியாது.

இதனால்தான் பொதுத் தேர்தலில் கூட்டணி அமைத்து களமிறங்கி, ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் புதிய அரசாங்கத்தை அமைக்க தீர்மானித்துள்ளோம்.

எமது அரசாங்கத்தில் பிரதமர் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்தமையால், என்னால் எதனையும் சுயாதீனமாக மேற்கொள்ள முடியாமல் போனது.

எனக்கு நேர்ந்தமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஏற்பட்டு விடக்கூடாது.

இதுதான் எனது பிரதான நோக்கமாகும். பிளவடையாமல் சக்தி மிக்க அரசாங்கமொன்றை ஸ்தாபித்து பயணிக்க வேண்டும்" என மேலும் தெரிவித்தார். (ம)


**வேலைக்கு ஆள் தேவை**

சனி, ஞாயிறு தினங்களில் காலை 8.30 - மாலை 4.30 மணி வரை கல்வி நிறுவனம் ஒன்றில் பணி புரிவதற்கு ஆள் தேவை.

தொடர்புகளுக்கு:- (C-9083)

**077 991 2628**

**யப்பான் சைக்கிள்**

விலை 12000/= லிருந்து



1.லேடீஸ் சைக்கிள்கள்
2.ஜென்ஸ் சைக்கிள்கள்
3.கியர் சைக்கிள்கள்
4.மடக்கும் சைக்கிள்கள்
5.Belt சைக்கிள்கள்
6.பாரம் ஏற்றும் சைக்கிள்கள்
7.டிவரஞ்சர் சைக்கிள்கள்
8.LED ஓட்டோமற்றிக் லைட் சைக்கிள்கள்

இலகுவான ஓட்டம்
பாட்ஸ் தாராளமாக உண்டு
கழுவிபூட்டுதல், திருத்த வேலைகள் இல்லை
நீண்டகாலப் பாவனை

**யப்பான் சைக்கிள் B பசார்**

மருதனார்மடம் றோட், உரும்பிராய் மேற்கு.
(மருதனார்மடம் சந்தியிலிருந்து 1 KM) (2130)

**Personal Class**

(விசேட வகுப்புக்கள்)

உயர்தர மாணவர்களுக்கான பௌதிகவியல் மற்றும் தரம் 9 – 11 வரையான மாணவர்களுக்கான கணிதம் என்பன தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும்.

தொடர்பு: **076 157 0107** (2115)

**வீடு விற்பனைக்கு**

நல்லூர் கோவில் முன்பக்கமாக ¾ பரப்புக் காணியுடன் 2 அறை Hall Kitchen கொண்ட வீடு ஒன்று விற்பனைக்கு உண்டு.

**விலை:- 1 கோடி 30 லட்சம்**
**விலை பேசித் தீர்மானிக்கலாம்.**

தொடர்பு கொள்ள (2116)

**077 004 5610**
**072 368 2134**

**விரைவு பொதிகள் சேவை**

**விசேட விலை குறைப்பு**

UK-550*/=Kg

DELIVERY IN 3-5 DAYS

எமது நேரடிக்கிளைகள்

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை ● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய் ● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

**0768226240** V2 TRAVELS (C-8785)

**தையல் வேலைக்கு ஆட்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் ஆடைத் தொழிற்சாலைக்கு தையல் தெரிந்த பழகவிரும்புவோர் தேவை.
பெண்கள் மட்டும் (2129)

**077 017 8009**
**076 895 1970**

**சாவகச்சேரியில்...**

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=

சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.

**076 443 1576**



**அருள்**

இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (C-9015)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
22 - 04 - 1963

மறைவு
26 - 01 - 2020

அமரர் **மாணிக்கம் ஆனந்தகுமார்**

**(கோட்டக் கல்வி அலுவலர் - தெல்லிப்பழை கல்விக் கோட்டம்)**

வலிகாமத்தின் வலிமை மிக்க கோட்டத்தை
ஆனந்தமாய் ஆட்சி செய்த ஐயனே
ஓய்வெடுக்க இன்னும் தொலைதூரம் இருக்கையில்
சொல்லாமல் கொள்ளாமல் நெடுந்துயில் கொண்டதேனோ
இடப்பெயர்வும் மீள்குடியேற்றமும் நில விடுவிப்பும்
என எம் கதை தொடர்கையில்
நின் பயணம் நிறைவு கொண்டது ஏன் ஐயா!
காலனவன் கணக்கு முடிந்ததுவோ கனக்குதையா எம் நெஞ்சம்
அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அனைவருக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**அதிபர்களும் கோட்டக்கல்வி அலுவலக உத்தியோகத்தர்களும்**
**தெல்லிப்பழை கல்விக் கோட்டம்**

(C-9080)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.01.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.